பராபவ ஸு ஆவணி மீ
ஆகஸ்ட் - ஸெப்டம்பர் 2026

மலர்: 9
இதழ்: 5

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# தேஶிக ஸந்தேஶம்





MONTHLY NEWSLETTER FROM:

## SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM

MYLAPORE, CHENNAI, Tel: 044 - 24953799, 044 - 43863747
Email: svdd.mylai@gmail.com Web: www.svdd.com



SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM'S

# New Multi-purpose Facility

(Ground Floor)



Sri Vedantha Desikar Devasthanam's **'Kamala Thothadri Hall',** a new Multi-purpose Facility for conducting **small functions, upanyasams, music programmes,** etc., available for rent at No. 25/13, Chitrakulam South Street, Mylapore, Chennai - 600 004.






**Further details at the temple office.**

**Phone: 044-24953799,**

**044-43863747.**

பராபவ ௵ ஆவணி ௴
ஆகஸ்ட் - செப்டம்பர் 2026

மலர்: 9
இதழ்: 5

ஸ்ரீ:

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஸிகாய நம:

# தேஸிக ஸந்தேஸம்

## திருக்கோவில் பூஜா காலங்கள் *

**காலை**

| ஞாயிறு முதல் புதன் வரை | | வியாழன் முதல் சனி வரை | |
|---|---|---|---|
| 6.30 - | விச்வரூபம் | 6.00 - | விச்வரூபம் |
| 8.30 - | திருவாராதனம் | 7.30 - | பொது தரிசனம் |
| 9.45 - | சாற்றுமுறை | | |

12.00 - உச்சிகாலம்

**மாலை**

4.00 - ஸந்நிதி திறப்பு, 7.30 - திருவாராதனம், 9.00 - சயனம்

* விசேஷ காலங்களில் மாறுதலுக்கு உட்பட்டது

**தர்மகர்த்தாக்கள்:**

ஸ்ரீ *L.N.* ஸ்ரீநிவாஸன் | ஸ்ரீ *P.* ஸ்ரீஹரி | ஸ்ரீ *N.* கஸ்தூரிரங்கன்

**Editorial Board :**

ஸ்ரீ நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி - ஆசிரியர்
ஸ்ரீ நாட்டேரி ஸ்ரீஹரி (எ) லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி

**Photo Courtesy:** M.K.S. Mohan Babu, P.S. Anand & Thillai Ranganathan
Published by: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை - 4
Printed by: Abisan Enterprises Chennai - 87, Cell : 95000 45604
Designed by: ye**SK**ay designs



**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்**
மயிலாப்பூர், சென்னை - 600004. போன்: 044 - 24953799, 43863747
Website: www.svdd.com Email: svdd.mylai@gmail.com



ஸ்ரீ:

# ஆசிரியர் விண்ணப்பம்

வேங்கடாத்3ரி ஸமம் ஸ்தா2நம் ப்3ரஹ்மாண்டே3 நாஸ்தி கிஞ்சந |
வேங்கடேஶ ஸமோ தே3வோ ந பூ4தோ ந ப4விஷ்யதி ||

இந்த ஆவணி மாதத்தின் சிறப்பு கண்ணனென்னும் கருந்தெய்வத்தின் அவதார தினம் நிகழும் மாதமாகும். '''அர்ஜுந, என்னுடைய பிறவி மற்றும் அவதாரம் ஆச்சர்யமானது. என் திருமேனி அப்ராக்ருதமானது. என் லீலை நினைத்த மாத்ரத்தில் ஸகல பாபங்களையும் போக்கக்கூடியது' என்று உள்ளது உள்ளபடி எவன் அறிகிறானோ அவன் அந்தத் தேஹத்தை விட்டு மறு பிறவியை அடையாமல் என்னையே அடைகிறான் என்றான் கண்ணன்.

அந்த கண்ணனுடன் நமக்குண்டான ஸம்பந்த ஜ்ஞானத்தை துயிலும்போது அனுஸரிப்பதே யோகம் எனப்படும் என்று ஒரு தினத்தின் ஐந்தாவது பிரிவாகும். இந்த யோகத்தைப் பற்றி வைஷ்ணவ தினசரி' என்னும் ப்ரபந்தத்தின் ஒன்பதாவது பாசுரத்தில் அனுஸந்திக்கிறார் ஸ்வாமி ஸ்ரீதேசிகன்.

ஒவ்வொரு ஜீவனுடைய பிற்கால வாழ்வைப் பற்றி சதுர்முகனான ப்ரஹ்மா அவன் தலையில் முன்னமே எழுதிவிடுகின்றான். அதன்படியே அவரவர் போகங்களை இக்கர்மபூமியில் அநுபவிக்கின்றனர். புத்தியைக் கொண்டு விவேகத்தால் இத்தகைய போகங்களை வெறுத்து நல்வழிப்படுபவன், ப்ரஹ்மா எழுதியதையும் பொய்யாக்கி விடுகின்றான். எப்படி என்றால்

தன் ஸ்வரூபத்திற்குப் பொருந்தியதாகக் கொள்வதும், தனக்கு உடைமையாகக் கொள்வதும், இந்த யோகமே என்று கூறும்படி, வருவது, நறுமலர்மகள் பதியான கண்ணனைப் பற்றியதுமான த்யாநமே ஆகும். அவர்கள் பேரருளாளன் திருவடிகளை இடைவிடாது சிந்திப்பதையே பேரின்பமாகக் கொள்வர்; இதையே தம் ஸ்வரூபத்திற்கு உரியதாயும் தமது உடைமையாகவும் கொண்டு அத்தகைய யோகத்தில் ஈடுபடுவர்.

இந்த யோகத்தில் எம்பெருமானைத் தவிர்த்த மற்றைய போகங்களைக் கைவிட்டு, பரம போக்யமான நறுமலர் மகளான பிராட்டியுடன் இன்புறும் கண்ணனை நினைப்பதே பரம ஏகாந்திகளுக்கு ஸ்வரூபம் என்பது தாத்பர்யம். இந்த யோக காலத்தில் பரமைகாந்தி ஸார்வபௌமர்கள், ஒவ்வொரு ப்ரபந்நரும் அடையவேண்டிய பலமான எம்பெருமானின் தன்னுடைச் சோதியான பரமபதத்தை வர்ணிக்கும் ஸ்ரீபாஷ்யகாரர் அருளிச்செய்த ஸ்ரீவைகுண்ட கத்யத்தை அநுஸந்திப்பர்.

ஆவணி அவிட்டம் கொண்டாடப்படும் இந்த மாதத்தில் வைதிக மதமான நம் ஸனாதன தர்மத்தின் ஆதாரமான வேதத்தின் பிரிவுகளைப் பற்றிய காப்பகக் கட்டுரையும், ஸ்ரீராமாவதாரத்தில் சரணாகதி சாஸ்த்ரத்தைக் காண்பிக்கும் அபயப்ரதான ஸாரத்தின் தொடரும், அத்புதமான தனி வ்யாஸங்களும், ரஹஸ்யத்ரய ஸாரம் மற்றும் நம் ஸம்ப்ரதாயத்தின் முக்கியான கருத்துக்கள் உள்ளடக்கிய ஆங்கிலத் தொடர்களுடன் சென்ற மாதத்தில் நடைபெற்ற ஆடி கருடன் உத்ஸவம், மாதப்பிறப்பு, ஆடி வெள்ளிக்கிழமை தாயார் புறப்பாடு, ஆண்டாள் உத்ஸவம் இவற்றுடன் தேஶிக ஸந்தேஶம்-100 விழாவின் வண்ணப் படங்களுடன் ஆவணி இதழ் உங்கள் கரங்களில்.

ஸ்ரீ:

# A Milestone of Faith, Readership And Bonding

## FROM THE DESK OF TRUSTEES



It is with profound gratitude and a deep sense of fulfilment that the Trust Board of the Devasthanam places on record the momentous occasion of the release of the 100th issue of Desika Sandesam. This milestone was celebrated in a grand function held at the Devasthanam on July 18, graced by an assembly of venerable vidwans and devout patrons whose presence elevated the event to a truly memorable spiritual and intellectual experience. In a highlight of the function, the proceedings were streamed live, enabling a much larger audience of devotees from across the globe to participate virtually in this historic celebration — a testament to the magazine's enduring reach and the boundless bond between the temple and its far-flung family of readers.

More than just a publication, Desika Sandesam has been a sacred bridge — a bond of faith that has lovingly connected the Devasthanam with its readers and devotees. For a hundred issues, this magazine has carried not merely articles, but the living voice of our Acharyas, the fragrance of our Utsavams, and the warmth of a community united in devotion. Its pages have documented the vibrant festivals of the temple — this month : Aadi Garudan, symbolising Gajendra Moksham, Andal Utsavam and Vellikkizhamai Thayar Utsavams where the Goddess ascended different vahanams — allowing readers to partake in the temple's celebrations even from afar.

The 100th issue was formally released by the esteemed centenarian scholar, Sri U.Ve. Azhisur Srinivasachariar Swami. The first copy was received by the Sribhashya Simhasanam Sri U.Ve. Villlur Karunakarachariar Swami. The dais was further graced by Sri U.Ve. Devanarvilagam Padmanabhacharyar Swami, Srikaryam of Sri Ahobila Mutt, and Sri U.Ve. Ananthapadmanabhacharyar Swami, Editor of Sri Nrusimhapriya, alongside the octogenarian Editor of Desika Sandesam, Sri U.Ve. Nelvoy Sowmyanarayanacharyar Swami. Together, this galaxy of scholars offered the audience a rich and unforgettable listening experience.

As we reflect on this milestone, we recognise that Desika Sandesam is far more than a magazine. It is the heartbeat of a community — a sacred space where faith meets scholarship, where the temple reaches out to its devotees, and where readers, whether near or far, find themselves at home in the presence of the Divine. It is, in every sense, a milestone of faith, readership and bonding.

The Trustees also place on record their sincere thanks to Sri S. Balajee for donating a stone-studded golden waist band to Perumal.

May the divine blessings of Lord Srinivasa, Sri Peyazhwar, and Swami Vedanta Desikan continue to guide Desika Sandesam in its mission for many more years to come — and may the bond between the temple and its devotees grow ever deeper, ever sweeter, and ever eternal. ❇

ஸ்ரீ:

## பராபவ வருட ஆவணி மாத பஞ்சாங்கம்

| ஆங்கில தேதி | தமிழ் தேதி | திதி | வாரம் | நக்ஷத்ரம் | உத்ஸவம் | உபயம் |
|---|---|---|---|---|---|---|
| ஆகஸ்ட் / செப்டம்பர் | ஆவணி | | | | | |
| | | | | | | |
| 18.08.2026 | 1 | ஷஷ்டி | செவ்வாய் | சித்திரை / ஸ்வாதி | மதுரகவிகள் | |
| 19.08.2026 | 2 | ஸப்தமி | புதன் | ஸ்வாதி / விசாகம் | பெரியாழ்வார் | |
| 20.08.2026 | 3 | அஷ்டமி | வியாழன் | விசாகம் | நம்மாழ்வார் | |
| 21.08.2026 | 4 | நவமி | வெள்ளி | அனுஷம் | ஸ்ரீமந்நாதமுனிகள் | |
| 22.08.2026 | 5 | தசமி | சனி | கேட்டை | தொண்டரடிப்பொடியாழ்வார் | |
| 23.08.2026 | 6 | ஏகாதசி | ஞாயிறு | மூலம் | திருமால்வடை | |
| 24.08.2026 | 7 | த்வாதசி | திங்கள் | பூராடம் | வைஷ்ணவ ஏகாதசி | |
| 25.08.2026 | 8 | த்வாதசி / த்ரயோதசி | செவ்வாய் | உத்திராடம் | ஆளவந்தார் | |
| 26.08.2026 | 9 | த்ரயோதசி / சதுர்தசி | புதன் | ச்ரவணம் | ஸ்ரீ ஹயக்ரீவ ஜயந்தி. கடை ச்ரவணம். காலை ஹயக்ரீவர், தேசிகன் திருமஞ்ஜனம். மாலை தேசிகன் வீதிபுறப்பாடு, ஆஸ்தானம், சாற்றுமுறை | ச்ரவணம்: ஸ்ரீ T.R. தேவநாதாசார்யார். ஹயக்ரீவ ஜயந்தி: ஸ்ரீ R. வாஸுதேவன் குடும்பத்தினர் |
| 27.08.2026 | 10 | சதுர்தசி / பௌர்ணமி | வியாழன் | அவிட்டம் | பூதத்தாழ்வார் | |
| 28.08.2026 | 11 | பௌர்ணமி / ப்ரதமை | வெள்ளி | சதயம் | பேயாழ்வார் | |
| 29.08.2026 | 12 | ப்ரதமை / த்விதீயை | சனி | பூரட்டாதி | திருமால்வடை | |
| 30.08.2026 | 13 | த்விதீயை / த்ருதீயை | ஞாயிறு | உத்திரட்டாதி | திருமால்வடை | |
| 31.08.2026 | 14 | த்ருதீயை / சதுர்த்தி | திங்கள் | ரேவதி | திருமால்வடை | |
| 01.09.2026 | 15 | சதுர்த்தி / பஞ்சமி | செவ்வாய் | அச்வினி | திருமால்வடை | |
| 02.09.2026 | 16 | பஞ்சமி / ஷஷ்டி | புதன் | பரணி | திருமால்வடை | |
| 03.09.2026 | 17 | ஸப்தமி | வியாழன் | கிருத்திகை | திருமங்கையாழ்வார் | |
| 04.09.2026 | 18 | அஷ்டமி | வெள்ளி | ரோஹிணி | ஸ்ரீ பாஞ்சராத்ர ஜயந்தி. மாலை கண்ணன் திருமஞ்ஜனம், ஆஸ்தானம் | ஸ்ரீ S. வீரராகவன் |
| 05.09.2026 | 19 | நவமி | சனி | ம்ருகசீர்ஷம் | மாலை உறியடி உத்ஸவம். பெருமாள், கண்ணன் வீதிபுறப்பாடு | ஸ்ரீ S. வீரராகவன் |
| 06.09.2026 | 20 | தசமி | ஞாயிறு | திருவாதிரை | ஸ்ரீ ராமானுஜர் | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 07.09.2026 | 21 | ஏகாதசி | திங்கள் | புனர்வஸு | குலசேகராழ்வார் | |
| 08.09.2026 | 22 | த்வாதசி | செவ்வாய் | புஷ்யம் | திருமால்வடை | |
| 09.09.2026 | 23 | த்ரயோதசி / சதுர்தசி | புதன் | ஆயில்யம் | திருமால்வடை | |
| 10.09.2026 | 24 | சதுர்தசி / அமாவாசை | வியாழன் | மகம் | திருமழிசையாழ்வார் | |
| 11.09.2026 | 25 | அமாவாசை / ப்ரதமை | வெள்ளி | பூரம் | அமாவாசை | |
| 12.09.2026 | 26 | ப்ரதமை / த்விதீயை | சனி | உத்திரம் | ஸ்ரீ தேசிகன் கண்ணாடியறைக்கு எழுந்தருளல் | ஸ்ரீ C.R. ராகவன் |
| 13.09.2026 | 27 | த்விதீயை | ஞாயிறு | ஹஸ்தம் | ராமானுஜ தயாபத்ரம் தனியன் திரு அவதார உத்ஸவம். தேசிகன் வார்ஷிக உத்ஸவம் 1-ம் நாள். காலை பல்லக்கு புறப்பாடு. தேசிகன் திருமஞ்ஜனம். மாலை யாளி வாஹனம் புறப்பாடு, ஸேவாகாலம், சாற்றுமுறை | தனியன் உத்ஸவம்: வேத பாராயண ஸபா. தேசிகன் உத்ஸவம்: காலை: ஸ்ரீ T.C. ரங்கராஜன், 2. ஸ்ரீமதி லக்ஷ்மி ராமபத்ரன் – 3. ஸ்ரீ ரங்கராஜன். மாலை: எலெக்டோரல் போர்ட் |
| 14.09.2026 | 28 | த்ருதீயை | திங்கள் | சித்திரை | தேசிகன் வார்ஷிக உத்ஸவம் 2-ம் நாள். காலை பல்லக்கு புறப்பாடு. தேசிகன் திருமஞ்ஜனம். மாலை ஸூர்ய ப்ரபை புறப்பாடு ஸேவாகாலம், சாற்றுமுறை | காலை: 1. ஸ்ரீமதி எச்சம்மாள் பண்ட் – 2. ஸ்ரீ K. ராஜகோபால். மாலை: 1. ஸ்ரீமதி எச்சம்மாள் பண்ட் – 2. ஸ்ரீ V. ராஜகோபால் |
| 15.09.2026 | 29 | சதுர்த்தி | செவ்வாய் | ஸ்வாதி | தேசிகன் வார்ஷிக உத்ஸவம் 3-ம் நாள். காலை பெருமாள் தங்க கருடன், தேசிகன் தங்க கேடயம் புறப்பாடு. தேசிகன் திருமஞ்ஜனம். மாலை ஸிம்ஹ வாஹனம் புறப்பாடு, ஸேவாகாலம், சாற்றுமுறை | காலை: 1. ஸ்ரீமதி பத்மா சாரங்கன் குடும்பத்தினர், 2. ஸ்ரீ P. ஸ்ரீநிவாஸ ராகவன் குடும்பத்தினர் – 3. ஸ்ரீ R. பார்த்தஸாரதி. மாலை: 1. ஸ்ரீ S.R.R. ஆசார்யா குடும்பத்தினர் – 2. ஸ்ரீ T.P. பத்மநாபன் |
| 16.09.2026 | 30 | பஞ்சமி | புதன் | விசாகம் | தேசிகன் வார்ஷிக உத்ஸவம் 4-ம் நாள். காலை பல்லக்கு புறப்பாடு. தேசிகன் திருமஞ்ஜனம். மாலை சந்த்ர ப்ரபை புறப்பாடு, ஸேவாகாலம், சாற்றுமுறை | காலை: ஸ்ரீ R. வெங்கடேஷ் – 2. ஸ்ரீமதி ஸ்ரீநிவாஸன். மாலை: ஸ்ரீ K. பார்த்தஸாரதி – 2. ஸ்ரீ குஞ்சிதபாதம் |
| 17.09.2026 | 31 | ஷஷ்டி | வியாழன் | அனுஷம் | தேசிகன் வார்ஷிக உத்ஸவம் 5-ம் நாள். காலை பல்லக்கு புறப்பாடு. தேசிகன் திருமஞ்ஜனம். மாலை ஹம்ஸ வாஹனம் புறப்பாடு, திருவாய்மொழி ஸேவாகாலம், சாற்றுமுறை | காலை: ஸ்ரீ V.A. ரகு குடும்பத்தினர் – 2. S.T. ராகவன் குடும்பத்தினர். மாலை: 1. ஸ்ரீ ஸ்ரீநிவாஸன் K. ஸ்வாமி – 2. ஸ்ரீ A. நரசிம்மன் |

குறிப்பு: 13.09.2026 முதல் 22.09.2026 வரை ஸ்ரீ தேசிகன் வார்ஷிக உத்ஸவம்

ஸ்ரீ:

# சதம் கண்ட ஸந்தேசம்

ஸ்ரீ உ.வே. ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி, மயிலாப்பூர்

தமிழ்த்தலைவன் பேயாழ்வார் அவதரித்த மாடமாமயிலையில் ஆசார்ய வள்ளலின் திருப்பெயரில் அமைந்துள்ள நம் தேவஸ்தானத்தில் திருவேங்கடமுடையான் பத்மாவதித்தாயாருடனும், ஆசார்ய ஸார்வபௌமருடனும் அண்டி வந்த பக்தர்களுக்கு அருள்பாலித்து வருவது அனைவரும் அறிந்ததே. நம் தேவஸ்தானத்தில் சுமார் எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் தற்பொழுது ஸ்ரீமதஹோபில மடத்தின் ஆசார்யராக விளங்கிவரும் ஸ்ரீவண் சடகோப ஸ்ரீரங்கநாத யதீந்த்ர மஹாதேசிகன் இந்த தேவஸ்தானத்தின் சார்பாக **தேசிக ஸந்தேசம்** என்னும் தேவஸ்தானத்தின் இந்த அதிகாரபூர்வமான மாதந்திர இதழைத் தொடங்கி வெளியிட்டருளினார்.

இந்த பத்ரிகையைத் தொடங்கிய பொழுது பத்திரிகையை விலையில்லாமல் வெளியிடவும், ஸ்ரீபகவத் ராமாநுஜ ஸித்தாந்தத்தைப் பரப்பவும், ஸ்வாமி ஸ்ரீதேசிகனின் அறிவுரைகளை கட்டுரைகளின் மூலம் வெளியிடவும், நம் ஸந்நிதியில் நித்ய, நைமித்திக உத்ஸவ விவரங்களை அறிவிக்கவும் அவ்வுத்ஸவங்களின் படத்தொகுப்புகளை




பக்தர்களுக்கு வழங்கவும் தேவஸ்தானத்தின் தர்மகர்த்தாக்களும் ஆசிரியர் குழுவும் முடிவெடுத்தனர்.

அந்தப்படிக்கு கடந்த காலத்தில் நம் ஸம்ப்ரதாயத்தில் எழுந்தருளியிருந்த மஹான்கள் பலர் அனுக்ரஹித்த பல அற்புதமான கட்டுரைகளையும், தற்பொழுது ஸம்ப்ரதாயத்தில் ஊற்றம் பெற்ற அடியவர்கள் வரைந்த, ஆழ்வார் ஆசார்யர்களின் பற்பல க்ரந்தங்களில் இருந்து தமிழில் மட்டும் அல்லாது ஆங்கிலத்திலும்



அமைந்த வ்யாஸங்கள் இந்த மாதந்திர இதழில் வெளியிடப்படுகிறது. இது மட்டுமல்லாது, இந்தத் திருகோயிலில் நடக்கும் உத்ஸவ பஞ்சாங்கமும், எம்பெருமான், பிராட்டி, ஆழ்வார் ஆசார்யர்களின் உத்ஸவங்களைப் பற்றிய விவரங்களும், இந்த உத்ஸவங்களின் ப்ரதி பிம்பங்களையும் மிகவும் நேர்த்தியாக உள்ளடக்கிய புத்தகம் இந்த தேஶிக ஸந்தேஶம்.

இந்தப் பத்திரிகை நூறு இதழ்களாக தடையில்லாமல் மாதாமாதம், கொரோனா ஸமயத்திலும் கூட இடைவிடாது மின்-நூலாக வெளியிடப்பட்டது என்பது இன்னுமொரு சிறப்பு.

இந்த ஸஞ்சிகை நிகழும் பராபவ ஹூ ஆடி மீ நூறாவது இதழாக வெளிவருவதை ஒட்டி, 18.07.2026 சனிக்கிழமை அன்று மாலை நம் தேவஸ்தானத்தில் புத்தக வெளியீட்டு விழாவாக மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

ஸ்ரீமதஹோபில மடம் ஆஸ்தான வித்வானும், நம் ஸந்நிதியில் பல்வேறு ஆண்டுகளாக அர்ச்சக கைங்கர்யம் செய்துவருபவரும், ப்ராயம் நூறைக் கடந்தவருமான ஸ்ரீ உ.வே. அழகியசெய்யூர் ஸ்ரீநிவாஸாசார்யர் ஸ்வாமி இந்த ஸபைக்குத் தலைமை ஏற்று அநுக்ரஹ பாஷணம் அருளினார். பொதுவாக ''ஸந்தேஶம்'' என்ற சொல்லிற்குப் பொருள் ''தூது'' என்ற போதிலும், நம் பத்திரிகைக்கு ஸ்ரீதேசிகன் நமக்கு கூறும் உபதேசமே ஸந்தேஶம் எனும் சொல்லிற்கு அர்த்தம் என்று மிகவும் சுவைபட எடுத்துரைத்தார். இந்த ஸம்ப்ரதாயமான புஸ்தக கைங்கர்யம் மேலும் பல்லாண்டுகள் சிறப்புற நடைபெற வேணும் என்றும் ஆசீர்வதித்தார்.

இந்த ஸபைக்கு ஸ்ரீ உ.வே. வில்லூர் நடாதூர் ஸ்ரீபாஷ்ய ஸிம்ஹாஸனம் கருணாகராசார்யர் ஸ்வாமி இந்த புத்தகம் ஆயிரம் இதழிற்கு மேல் வெளிவர வேண்டும் என்று ஸம்ஸ்க்ருதத்தில் அற்புதமான ஒரு



கவிதையை வரைந்து தம்முடைய அநுக்ரஹத்தை அருளினார்.

*ஸஹஸ்ர பங்க்த்யம்ச விகாஸ கஸ்ரே*
*ஸஹஸ்ர பத்ராஸன தாதபூத: |*
*ஸஹஸ்ர பத்ராஸனயா ஸமேத:*
*ஸஹஸ்ரபாதோ பவதாத் ப்ரஸன்ன: ||*

ஒரு புத்தகத்தை வெளிக்கொணர்வது மிகவும் கடினமானது என்றும் ஏற்கனவே தோன்றிய கட்டுரைகள் திரும்பவும் வெளியிடக்கூடாது எனவும், அவ்வாறில்லாமல் தர்மகர்த்தாக்களும், ஆசிரியர்களும், கட்டுரை எழுதுபவர்களும், ஒவ்வொரு இதழிற்கும் உபயதாரர்களும் ஸமர்த்தர்களாக அமைந்திருப்பது நம் ஆசார்யரின் கருணையினாலேயே என்று மிகவும் ச்லாகித்து உபந்யஸித்தார்



ஸ்ரீ:







ஸ்ரீமதஹோபிலமடத்தின் ஸ்ரீகார்யம் ஸ்ரீ உ.வே. தேவனார்விளாகம் பத்மநாபாசார்யர் ஸ்வாமி ஒரு பத்திரிகை நடத்தும் ச்ரமங்களையும், பெரியவர்கள் கடந்த காலங்களில் கையாண்ட உத்திகளையும், இந்த காலத்தில் ஸம்ப்ரதாய பத்திரிகை அச்சடித்து வெளியிடுவதன் அவசியத்தையும் கூறி, இந்த ஸஞ்சிகையின் முதல் இதழ் வெளியீட்டிலும் நூறாவது இதழ் வெளியீட்டிலும் தாம் கலந்து கொண்டதை பெருமையுடன் கூறினார்.

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா ஸம்பாதகர் ஸ்ரீ உ.வே. அனந்தபத்மநாபாசார்யர் ஸ்வாமி பத்திரிகை வெளியிடுவது எவ்வளவு கடினம் என்பதை ஸ்வாமி, ஸ்ரீதேசிகனின் ஸங்கல்ப ஸூர்யோதயம் என்ற க்ரந்தத்தின் மூலம் சுவைபடக் கூறி, ஸம்ப்ரதாய ஸஞ்சி கைகளை வாசிப்பதின் அவசியத்தை எடுத்துரைத்து வாசகர்கள் கட்டுரைகளை வாசித்து பின்பு அதிலுள்ள ஸந்தேஹங்களை எழுதியவர்களிடமும் ஆசிரியர்களிடமும் கேட்க வேண்டும். இதுவே பத்திரிகையை மேம்படுத்தும் என்றும் எடுத்துக் கூறினார்.

தேஶிக ஸந்தேஶத்தின் ஆசிரியர் குழுவின் தலைவர் ஸ்ரீ உ.வே. நெல்வாய் ஸௌம்யநாராயணா சார்யர் ஸ்வாமி, ஸ்ரீதேசிகன் வேதாந்த ப்ரவசனத் திற்கு ஆசார்யர் எனவும், ஸ்வாமி தேசிகனுடைய ப்ரவசனங்களைப் பரப்புவதே இந்த ஸந்தேஶத்தின் முழுமுதற் கொள்கை எனவும், இந்த ஸஞ்சிகையின் எட்டு ஆண்டு பயணத்தைப் பற்றியும், பத்திரிகை எடுத்துக்கொண்ட முறையையும் அமைப்பையும் கூறி பத்திரிகையின் மேம்பாட்டிற்காக வாசகர்களின் எண்ணங்களையும், பரிந்துரைகளையும் ஆசிரியர் குழு வரவேற்பதாகவும் கூறினார்.

மேலும் இந்தப் புத்தகம் ஆரம்பித்தது முதல் ஆசிரியர் குழு அப்படியே தொடர்வது ஒரு சிறப்பு என்று கூறி, இந்த கைங்கர்யத்தில் ஸ்ரீ உ.வே. நாட்டேரி ஸ்ரீஹரி



ஸ்வாமியின் அளப்பரிய பணியை மிகவும் ச்லாகித்து உகந்தார்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்ட வித்வான்களையும், ஆசிரியர் குழுவில் இடம்பெற்ற ஸ்ரீ உ.வே. நாட்டேரி ஸ்ரீஹரி ஸ்வாமி, ஸ்ரீ உ.வே. நாவல்பாக்கம் ரங்கநாதா சார்யர் ஸ்வாமி மற்றும் ஸ்ரீ உ.வே. ஸத்யநாராயணன் ஸ்வாமி ஆகியோரையும், பத்திரிகைக்கு விஷயதானம் செய்யும் வித்வான்களையும், விதுஷிகளையும் ஸ்ரீ உ.வே. நெல்வாய் ஸ்வாமி கௌரவித்தார்.

சந்தா வருமானம் இல்லாமல் இந்த புத்தகத்தை அச்சடித்து வெளிக்கொணர்வதற்கு உபயதாரர்களின் கைங்கர்யம் மிகவும் முக்யமான காரணமாகும். மேலும் இந்த நூறாவது சிறப்பிதழிற்காக ப்ரத்யேகமாக சில ஆஸ்திகர்கள் உபயம் செய்தருளினர். இந்த உபயதாரர்களும் இந்த நிகழ்ச்சியில் கௌரவிக்கப் பட்டனர்.

மேலும் நம் தேவஸ்தானத்தில் நடைபெறும் உத்ஸவங்களை தத்ரூபமாக படம்பிடித்து பத்திரிகைக்கு மெருகூட்டும் ஆஸ்திகர்களும் இவ்வமயம் சிறப்பிக்கப் பட்டனர்.

திருக்கோயிலின் நிர்வாஹகர்களான, லாடவரம் ஸ்ரீநிவாஸன் ஸ்வாமி, நாட்டேரி ஸ்ரீஹரி ஸ்வாமி மற்றும் கஸ்தூரிரங்கன் ஸ்வாமி ஆகியோர் விழாவினை மிகவும் சிறப்பாக அமைத்துக் கொடுத்தனர். பகவத் ப்ராஸத விநியோகத்துடன் இந்த நூறாவது இதழ் வெளியீட்டு விழா இனிதே நிறைவுற்றது ❋

## ஆஸ்திகர்கள் கவனத்திற்கு

பரமபத ப்ராப்தி அடைந்தவர்களுக்கு 12 நாட்கள் வரையிலான கைங்கர்யங்களைச் செய்யும் வகையில், ஆறு பகுதிகளுடன், நம் தேவஸ்தானத்தின் 'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்' இயங்கி வருகிறது.




முகவரி மற்றும் விவரங்களுக்கு:
**'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்'**
9/5, வேங்கடேச அக்ரஹாரம் தெரு,
மயிலாப்பூர், சென்னை – 600004.
போன்: 044 – 4322 9401.

**நிர்வாகம்:** ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை – 600004.

DESIKA SANDESAM 100

ஸ்ரீ:

# ACKNOWLEDGEMENTS


The Devasthanam records its heartfelt thanks to the following for their immense contribution towards the magazine reaching the milestone:

## Editorial Board

Nelvoy Sowmyanarayanacharyar Swami, Chennai
Natter Srihari (a) Lakshmi Nrusimhacharyar Swami, Chennai
Navalpakkam Ranganathacharyar Swami, Chennai
Sriperumbuthur Satyanarayanacharyar Swami, Chennai

## Article contributors

Pazhaveri Lakshminarasimhacharyar Swami, Bengaluru
Thiruvayindhai Krishnadesikacharyar Swami, Chennai
Kavanoor Sudharsanacharyar Swami, Chennai
Esayanur Seshagopalacharyar Swami
Azhisur Sudharshanacharyar Swami, Chennai
Pudu Agraharam Parthasarathy Swami, Bengaluru
Sogathur Srivatsan Swami, Chennai
Sujatha Desikan, Bengaluru
Hema Rajagopalan, Bengaluru
Padmalatha Sridharan, Bengaluru
Pazhaveri Rama Raghavasimhan, Chennai
Anuradha Seshadri, Bengaluru
Vasumathi S. Rajan, Bengaluru

## Photographers

M.K.S. Mohan Babu | P.S. Anand | Thillai Ranganathan

## Sponsors

Adhisheshan | Akshara Play School | Atithya Homes | Azhisur T. Srinivasachariar | Carnatica | Dhanya Associates | Dr. Kannan & Padmaja Kannan | Gopala Desikan K | Indravadan Addanki | Kalyanasundaram R | Kozhiylam Family | LVN Catering | Muralidharan VC, Bengaluru | Mythili Chakrapani | Narayana Guruviah Chetty's Estate & Charities | Parthasarathy R & Dhirish Parthasarathy | Premkumar VP | Priya & Murali TR | Purisai Rangachariar Family | Raghavachariar NR & Chandra Iyengar | Raghu VA | Rajagopal DS | Rajagopal R (Eyetex) | Ram SP | Ramakrishnan R | Ramana Sundaram K | Ramasami SP | Ramcons | Rangarajan S | Rangarajan TC | Ratna Cafe, Triplicane | Seshadri N & Family, Kimsuka Narasimhan, Narasimhan S & Pushpa Narasimhan | Sevilimedu Raghavan | Shri Thenandal Enterprises | Sridhar Parthasarathy & Family | Srinivasan R | Sriram Seshadri | TVS Motor Company Ltd. | Vasudevan K | Venkataramanan S

**Printer** Abisan Enterprises, Chennai

**Designer** ye**SK**ay designs

***- Trustees***

# வேதங்களும் அதன் சாகைகளும்

ஸ்ரீ உ.வே. திருமலை, சதுர்வேத சதக்ரது, வலயபேட்டை
ராமாநுஜ தாதாசார்யார் ஸ்வாமி, நாவல்பாக்கம், வைகுண்டவாஸீ

**ருச: ஸாமாநி யஜூம்ஷி ஸாஹி ஸ்ரீரம்ருதா ஸதாம்||**

பகவான் இவ்வுலகத்தைப் படைக்கும்போது **யஸ்ய நிச்வஸிதம் வேதா:** என்று பகவானின் மூச்சுக் காற்றாக சொல்லப்பட்ட வேதத்தின் துணை கொண்டே படைத்தான். இவ்விஷயம் **ஸ பூரிதி வ்யாஹரத், ஸ பூமிம் அஸ்ருஜத, ஸ புவ இதி வ்யாஹரத், ஸோந்தரிக்ஷம ஸ்ருஜத, ஸ ஸுவரிதி வ்யாஹரத், ஸ திவ்யம் அஸ்ருஜத** என்று சொல்லப்பட்டுள்ளது. இந்த வேதமே எல்லா தர்மங்களுக்கும் காரணமாக விளங்குகிறது என்பதை **வேதோகிலோ தர்ம மூலம்** முதலான ஸ்ம்ருதி வசனங்கள் பரக்கப் பேசுகின்றன.

**வேதம் அளவிட முடியாதது**

வேதங்கள் முடிவில்லாதது, விராட் ரூபமான வேதத்தை இவ்வளவுதான் என்று எந்த ப்ரமாணத்தினாலும் அளவிட்டுச் சொல்ல முடியாது. வேதம் அளவிட முடியாதது என்பதை பரத்வாஜர் வ்ருத்தாந்தம் மூலமாக வேதமே சொல்லியுள்ளது.

**பரத்வாஜோ ஹ த்ரிபிராபுப்ரி ப்ரஹ்மசர்யமுவாச | தம் ஹ ஜீணிம் ஸ்தவிரம் | யானம் | பரத்வாஜோ ஹ த்ரிபிராபுர்பி ப்ரஹ்மசர்யமுவாச | தகும் ஹ ஜீணிம் ஸ்தவிரம் ஶயானம் | ...பரத்வாஜேத்யாமந்த்ர்ய | வேதா வா ஏதே | அநந்தா வை வேதா: |**

பரத்வாஜ ரிஷி 300 வருடங்கள் ப்ரஹ்மசர்ய வ்ரதம் இருந்து கொண்டு வேதாத்யயனம் செய்து வந்தார். 300 வருடங்கள் அத்யயனம் செய்தும் வேதத்தை பூரணமாக அத்யயனம் செய்யமுடியவில்லையே என மனம் வருந்தி மீண்டும் அத்யயனமே செய்ய வேண்டும் என்று தபஸ் செய்தார். முடிவில் இந்த்ரன் ப்ரத்யக்ஷமாகி ''ஹே பரத்வாஜ! உமக்கு நான்காவது ஆயுளையும் கொடுக்கின்றேன். இந்த ஆயுஸ்ஸில் நீ என்ன செய்யப் போகிறாய்?'' என்று வினவினான். இந்த ஆயுஸ்ஸிலும் வேதாத்யயனம் தான் செய்யப்போகிறேன் என்று பரத்வாஜர் பதில் கூறினார். அப்பொழுது இந்த்ரன் அவருடைய எதிரில் மலைகளைப் போன்ற வேத பாகங்களைக் காண்பித்து அந்த மூன்று மலைகளிலிருந்தும் மூன்று பிடி எடுத்துக் காண்பித்து ''பரத்வாஜ! உன்னால் 300 வருடங்களாக அத்யயனம் பண்ணப்பட்ட பாகம் இவ்வளவு தான். மலைபோன்று உள்ள மீதி பாகங்கள் அனைத்தும் நீ அத்யயனம் செய்யாத பாகம்'' என்று வேதத்தின் முடிவில்லாத் தன்மையை விளக்கினான்.

இந்த ஸம்வாதத்தினால் நாம் அறிவது யாதெனில் எப்படிப்பட்ட மஹிமையை உடையவராக இருந்தாலும் ஸம்பூர்ண வேத பாகத்தையும் அத்யயனம் செய்வது என்பது இயலாத காரியம் என்பதேயாகும்.

**வேதத்தின் பிரிவுக்குக் காரணம்**

வேதம் முதலில் முழுமையாகத் தான் இருந்தது. பின்பு வேத வ்யாஸரால் தான் அத்யயனம் பண்ணுபவரின் ஸௌகர்யத்திற்காக பல பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டன. இந்த விஷயத்தில் விஷ்ணு புராண வசனம் நிதர்சனமாக உள்ளது.

*வேதமேகம் சதுர்வேதம் க்ருத்வா சாகாசதைர்விபு: |*
*கரோதி பஹுளம் பூயோ வேத வ்யாஸ ஸ்வரூபத்ருக் ||*
*த்வாபரே து யுகே விஷ்ணு: வ்யாஸரூபீ மஹாமுனே |*
*வேதமேகம் ஸ பஹுதா குருதே ஜகதோ ஹித: ||*
*மயா ச குருதே தந்வா வேதம் ஏகம் ப்ருதக் ப்ரபு: |*
*வேத வ்யாஸாத் நிதானாத் து ஸா ஸா மூர்த்திர் மதுத்விஷ: ||*

தர்மத்தை நான்கு கால்களை உடைய விலங்காக உருவகப்படுத்தி, அது க்ருத யுகத்தில் நான்கு



கால்களுடன் ஸம்பூர்ண உருவத்துடன் இருந்ததாகவும், த்ரேதா யுகத்தில் ஒரு காலை இழந்து மூன்று கால்களுடனும், த்வாபர யுகத்தில் இரண்டு கால்களுடனும், கலியுகத்தில் மூன்று கால்களை இழந்து ஒரே காலுடன் தாங்கமுடியாத கஷ்டத்தை அநுபவிக்கப் போவதை முக்காலமும் உணர்ந்த பகவத் ஸ்வரூபமான வேத வ்யாஸர் நினைத்து வருந்தினார். இது மட்டுமல்லாமல் மற்றொரு விஷயமும் அவருக்கு மிகுந்த வேதனையைக் கொடுத்தது. க்ருத யுகத்திலிருந்து ஒவ்வொரு யுகத்திலும் படிப்படியாக மக்களின் அறிவாற்றல் பிரமிக்கத்தக்க வகையில் குறைவதே அது. இது யாராலும் மாற்றமுடியாத இயற்கை நியதியாகும். உலக வ்யவஹாரங்கள் முறைப்படி நடக்க வேண்டுமானால் அதற்கு ஆதாரமானவை வேதங்கள்தான். அவற்றை முறைப்படி கற்று அறிந்து காப்பதே அரிய பெரிய திருப்பணியாகும். இதை ப்ராஹ்மணர்கள் வேறு பலனை எதிர் நோக்காமல் **நிஷ்காரணேன ஷடங்கோ வேதோ அத்யேய:** என்கிறபடி வேதாத்யயனம் செய்வதே பிறவிப்பயன் என்று கருதி வேதாத்யயனம் செய்ய வேண்டும். ஸமக்ர வேதாத்யயனம் என்பது இயலாத காரியமன்றோ? இதை நினைத்து வேத வ்யாஸர் ஒரு வழியைக் கண்டு பிடித்தார்.

வேதங்களைப் பலவாறாக பிரித்து சிறு சிறு பகுதிகளாகப் பிரித்து விட்டால் அதைக் கற்பவர்கள் அதிக ஆயாஸமின்றி உத்ஸாகத்துடன் தத்தம் கார்யங்களில் ஈடுபடுவர். இவர் இவர் இந்த இந்த வேத சாகைகளைத் தான் அத்யயனம் செய்ய வேண்டும் என்று நியமத்தை ஏற்படுத்திவிட்டால் வேதத்தின் எல்லா பாகங்களும் அழியாமல் அத்யயன பரம்பரையில் வந்து விடும். இவ்வாறு முறைப்படுத்துவது யாரால் முடியும்? இது என்ன ஸாமாந்யமான காரியமா? அகண்டமான வேதம் முழுவதையும் மனதில் தேக்கி வைத்து பிறகு தானே அதைப் பிரிவுபடுத்த வேண்டும். இதற்கு பூரணமான தகுதி பெற்றவர் வேதவ்யாஸர் ஒருவரே ஆவார். வேத வ்யாஸர், ரிக், யஜுஸ், ஸாமம் என்ற மூன்று வகையான பாகங்களையும் தமது கூர்ந்த அறிவினால் தனித்தனியாகப் பிரித்தார். அவ்வாறே அதர்வ வேதத்தையும் தனிப்படுத்தினார். இத்துடன் நில்லாமல் இவற்றை ப்ரசாரம் செய்ய மஹா மேதாவிகளான சிஷ்யர்களைக் கண்டெடுத்தார். அவர்களே பைலர், வைசம்பாயனர், ஜைமினி, ஸுமந்து என்பவர்களாம். இவர்கள் முறையே நான்கு வேதத்தையும் ப்ரவர்த்திப்பித்தனர். இவ்வாறாக ஒன்றாக இருந்த வேதத்தை நான்காகப் பகுத்து தக்க முனிவர்களிடம் ஒப்படைத்து லோகத்திற்கு க்ஷேமம் ஏற்படும்படி செய்ததாலேயே இவருக்கு வேத வ்யாஸர் என்று பெயர் ஏற்பட்டது.

*யோ வ்யஸ்ய வேதான சதுர்ஸ்தபஸா பகவான் ருஷி: |*
*லோகே வ்யாஸத்வமாபேதே கார்ஷ்ணயாத்*
*க்ருஷ்ணாத்வமேவ ச ||*

என்று மஹாபாரதத்தில் வ்யாஸரைப் பற்றி சொல்லப்பட்டுள்ளது.

இவ்விஷயத்தில் **ருச: ஸாமாநி ஜக்ஞிரே சந்தாகும்ஸி ஜக்ஞிரே தஸ்மாத்** என்று வேதாவிர்பாவ காலத்திலேயே பிரிவுடனேயே ஆவிர்பவித்ததாக வேதம் கூறுவதால் வேத வ்யாஸரால் ஏற்படுத்தப்பட்டது அன்று இந்த பாகுபாடு என்பது சிலர் கருத்து. ஆயினும் பஹுசாகை களாக ஒவ்வொரு வேதமும் பிரிக்கப்பட்டிருப்பது கண் கூடானபடியால் **நிமித்த மாத்ரம் பவ** என்கிற ரீதியில் வேத வ்யாஸர் உலகுக்களித்தார் என்பது எல்லோராலும் ஒப்புக் கொண்டதே. விரிவுக்கஞ்சி இந்த விவாதத்தை விவரிக்கவில்லை.

**வேதங்களின் விபாகங்கள்**

**அக்னிஹோத்ர பலா வேதா:** என்று அத்யயனம் செய்யப்பட்ட வேதத்திற்கு யஜ்ஞாநுஷ்டானம் தான் பலம் என்பதற்கு அநுகூலமாக இருக்கும் படி வேதத்தை பாகுபடுத்தினார். இதை அநுஸரித்தே ஸூத்ரகாரர்களும் **யஜ்ஞம் வ்யாக்யாஸ்யாம:** என்று ஆரம்பித்து **ருக் வேதேந ஹோதா யஜுர் வேதேந அத்வர்யு: ஸாம வேதேந உத்காதா ஸர்வை: ப்ரஹ்மா** என்று

## ஆவணியில் முக்கிய உத்ஸவங்கள்

**ச்ரவணம் - ஸ்ரீ ஹயக்ரீவ ஜயந்தி**
ஆகஸ்ட் 26 (புதன்)

**ஸ்ரீஜயந்தி**
செப்டம்பர் 4 (வெள்ளி)

**உறியடி உத்ஸவம்**
செப்டம்பர் 5 (சனி)

**‘ராமாநுஜ தயாபாத்ரம்’**
**தனியன் திரு அவதார உத்ஸவம்**
செப்டம்பர் 13 (ஞாயிறு)

**ஸ்வாமி தேசிகன் வார்ஷிக உத்ஸவம் (10 நாட்கள்)**
செப்டம்பர் 13 (ஞாயிறு) முதல்
22 (செவ்வாய்) வரை

சொல்லப்பட்டது. அதர்வ வேதத்திற்கு ஸாக்ஷாத் தாக யாகங்களில் விநியோகம் கிடையாது. சாந்தி கர்மாக்களிலும் காம்ய கர்மாக்களிலும் உபயோகம் சொல்லப்பட்டுள்ளது அதர்வண வேதத்திற்கு.

மஹாபாஷ்யத்திலும், சரணவ்யூஹம் என்னும் க்ரந்தத்திலும், புராணங்களிலும் கூறியுள்ளபடி வேதங்களின் சாகைகளையும், வேதங்களின் விபாகங்களையும் ஈண்டு பார்ப்போமாக.

**ருக் வேதம்: ருச்யதே ஸ்தூயதே அந்யா இதி ருக்** என்பது சப்த வ்யுத்பத்தியாகும். ஸ்துதி பரமான மந்த்ரம் என்பது இதன் பொருளாகும். இது ‘‘யோகரூட’’ சப்தமாகும். மஹாபாஷ்யத்தில் ருக்வேதத்திற்கு 21 சாகை என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் தற்பொழுது ஐந்து சாகைகளின் பெயரே புலப்படுகிறது. **சரண வ்யூஹ** க்ரந்தத்தில் **1. சாகல, 2. பாஷ்கல, 3. ஆச்வலாயன, 4. சங்காயன, 5. மாண்டுகாயன** சாகைகளின் பெயரே சொல்லப்பட்டுள்ளது.

இதில் சாகல சாகை மட்டுமே முழுமையாகக் கிடைக்கப்பட்டுள்ளது. வாஷ்கல சாகை முழுமையாகக் கிடைக்கப் பெறவில்லை. இருப்பினும் ருக் ப்ராதி சாக்யங்களில் முக்யமாகவும் முதலாவதாகவும் சாகல சாகையே படிக்கப்பட்டுள்ளது.

ருக்வேதமானது ஹோத்ரு சாகையைப் பற்றி ப்ரதானமாகக் கூறுவதால் யாகத்தில் இதை உச்சரிப்பவர் ஹோதா என்றழைக்கப்படுகிறார். யஜுர் வேதத்திலும் ஹௌத்ர மந்த்ரம் இருந்தாலும் அது பூர்ணமாக இல்லை. ஆதலால்தான் ஹோத்ரு சாகை என்று ருக்வேதத்திற்குப் பெயர். இதையே ஸ்வாமி தேசிகனும் **ஹோத்ரு சாகா ந்யாயேன** என்பதாக ஸாதித்துள்ளார். ருக் வேதமானது நியதமான சந்தஸ்ஸுகளை உடையது.

**யஜுர் வேதம்: யஜூஸ்** சப்தத்தின் பொருள் ‘‘இஜ்யதே அனேன இதி யஜு:’’ என்று கூறப்பட்டுள்ளது. அதாவது எதனால் தேவதை பூஜிக்கப்படுகிறதோ அது யஜூஸ் ஆகும் என்பது பொருள். யஜூர் வேதத்தில் யாக ப்ரக்ரியை சொல்லப்பட்டுள்ளது. **அநியதாக்ஷரா வஸனோ யஜு:** என்று சொல்லியுள்ளபடியால் ருக் வேதத்தைப் போன்று **உந்தஸ், பத்யம்** போன்ற நியமங்கள் இங்கு கிடையாது. யஜுர் வேதமானது சுக்ல யஜுர் வேதம் க்ருஷ்ண யஜுர் வேதம் என இருவகைப் படும். **மந்த்ர ப்ராஹ்மணாத்மகோ வேத:** என்று மந்த்ரமும் ப்ராஹ்மணமும் சேர்ந்தது வேதம் என்று சொல்லப்பட்டுள்ளது. ப்ராம்ஹண பாகம் மட்டும் எங்கு படிக்கப்பட்டுள்ளதோ அது சுக்ல யஜுர் வேதம் என்று அழைக்கப்படுகிறது. எங்கு மந்த்ரபாகமும் ப்ராம்ஹண பாகமும் சேர்ந்து படிக்கப்பட்டுள்ளதோ அது க்ருஷ்ண யஜுர் வேதமாகும். க்ருஷ்ண யஜுர் வேதமானது அதிப்ராசீனமாகக் கருதப்படுகிறது. ஸூத ஸம்ஹிதை முதலியவைகள் ப்ரகாரம் யஜுர் வேதத்திற்கு 107 சாகைகள். சரண வ்யூஹத்தில் 83 சாகை என்று சொல்லப்பட்டுள்ளது. ஆனால் **ஏகம் சதம் அத்வர்யு சாகா** என்று மஹாபாஷ்ய வாக்யத்தை அநுஸரித்து 100 சாகையைக் கொண்டது யஜுர்வேதம் என்றே ப்ரஸித்தி. இவைகளில் தற்போது ஐந்து சாகைகளே காணப்படுகின்றன. அவை **1. வாஜஸநேய சாகா, 2. காண்வ சாகா, 3. தைத்திரீய சாகா, 4. மைத்ராயணீ சாகா, 5. கட காபிஷ்டல சாகா** என்பதாகும். இதில் முதல் இரண்டும் சுக்ல யஜுர் வேதத்தைச் சேர்ந்தது. மீதி மூன்றும் க்ருஷ்ண யஜுர் வேதத்தைச் சேர்ந்ததாகும். ஸூர்யன் வாஜஸநேயருக்கு பகல் வேளையில் உபதேசம் செய்தபடியால் வாஜஸநேய சாகைக்கு மாத்யந்தின சாகை என்றும் பெயருண்டு. இதில் கடைசியாகக் கூறப்பட்ட கட காபிஷ்டல சாகையில் 6 அஷ்டகம் மட்டுமே கிடைக்கப்பட்டுள்ளது.

**ஸாமவேதம்:** உத்காதா என்றழைக்கப்படும் ரித்விக்கினுடைய கார்யஸங்கலனமே ஸாமவேதம் என்றழைக்கப்படுகிறது. **வேதானாம் ஸாமவேதோஸ்மி** முதலிய வசனங்களால் இந்த வேதத்தின் மஹிமை யாவரும் அறிந்ததே. **ஸாமவேதஸ்ய கில ஸஹஸ்ரம் பேதா பவந்தி** என்று சரணவ்யூஹ க்ரந்தத்தில் சொல்லப்பட்டுள்ளது. நம் ஸித்தாந்த ப்ரவர்தகரான நாதமுனிகளும் **ஸஹஸ்ரசகோபநிஷத் ஸாமம்** என்றும், ஸ்ரீ ஸ்வாமி தேசிகனும் **ஸஹஸ்ர சாகாம் யோத்ரா க்ஷீத்** என்றும் அருளியுள்ளபடியால் ஸாமவேதம் 1000

## New Matrimonial Column

We are also happy to inform our readers that, based on requests from several parents in our community, Desika Sandesam will soon introduce a special Matrimonial Column in the magazine as a **free service** to our society. Interested parents may share the details of prospective brides and bridegrooms, and this new feature is proposed to be introduced soon. Parents who wish to participate may kindly send the details in advance so that they can be included in the upcoming issue.

**- Trustees**

சாகைகளைக் கொண்டது என்பது ஸித்தமாகிறது. ஆனால் சரண வ்யூஹ, ஜைமினீ க்ருஹ்ய ஸூத்ரம் முதலிய க்ரந்தங்களைப் பார்க்கும் போது ஸாமவேதம் 13 சாகையை உடையது என்று ஏற்படுகிறது. ஆனால் தற்போது மூன்று சாகைகளே உபலப்தமாக உள்ளது. அவை **1. கௌதும சாகை, 2. ராணாயணீய சாகை, 3. ஜைமிநீய சாகை** என்பனவாகும். சாந்தோக்ய உபநிஷத் ஸாமவேதத்தைச் சார்ந்ததாகும்.

**அதர்வண வேதம்:** மஹாபாஷ்யத்தில் **நவதா அதர்வணோ வேத:** என்று சொல்லியபடி 9 சாகைகளைக் கொண்டது அதர்வண வேதமாகும். மீதி க்ரந்தங்களும் அதர்வண வேதம் 9 சாகைகளை உடையது என்றே கூறுகின்றன. இப்பொழுது **பைப்பலாத, சௌனகிய** சாகைகள் என்று இரண்டு சாகைகளே வழக்கில் உள்ளன. இதில் அபிசாராதிகளும், சாந்திகர்மா முதலியவைகளும் படிக்கப்பட்டுள்ளன.

வேதத்தின் பேதங்களை ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் ஸ்ரீபாஞ்சராத்ர ரக்ஷையில் **ருகாதிவதேவ சதுர்தா அவதிஷ்டதே** என்று ஸாதித்துள்ளார்.

**வேதத்தில் பாட க்ரமங்கள்**

கீழ்க்கூறிய சாகைகளில் பலவிதமான பாடபேதங்களும் உள்ளன. உதாஹரணத்திற்கு தைத்திரீய சாகையில் நாம் அத்யயனம் செய்யும் பாட க்ரமத்தை பார்ப்போமாக:

வேத மந்த்ரங்களை எல்லாம் காண்டருஷி தர்பணம் செய்துவிட்டு தான் ஆரம்பிக்க வேண்டும் என்பதாகச் சொல்லியுள்ளது.

தைத்திரீய சாகை 4 காண்டங்களாக பிரிக்கப் பட்டுள்ளது. 1. ப்ரஜாபதி காண்டம், 2. ஸோம காண்டம், 3. அக்னி காண்டம், 4. வைச்வதேவ காண்டம் என்பனவாகும். இவற்றில் ப்ரஜாபதிக்கு யாஜமானம் முதலிய 9 காண்டங்கள், 2. ஸோமனுக்கு அத்வர க்ரஹ தக்ஷிணா முதலிய 9 காண்டங்கள், 3. அக்னிக்கு அக்ரயாதேயம் முதலிய 7 காண்டங்கள், 4. விச்வேதேவனுக்கு ராஜஸூயம் முதலிய 16 காண்டங்கள்.

இதுவரை 4 காண்டருஷிகளின் பாகம் சொல்லப் பட்டது. அடுத்து உபநிஷத்துக்கள் சொல்லப் படுகின்றன.

**ஸாம்ஹிதீநாம் உபநிஷத் – சந்நோ மித்ர** முதலியன;

**யாஜ்ஞிகீநாம் உபநிஷத் – அம்பஸ்ய பாரே** முதலியன;

**வாருணீநாம் உபநிஷத் – ஸஹ நாவவது** முதலியன.

ஸ்வாத்யாய ப்ராஹ்மணத்திற்கு ப்ரஹ்மா ஸ்வம்பு ருஷியாவார். அதன் பிறகு ஏகாக்னி காண்டத் திற்கும் வைச்வதேவாக்னி மந்த்ரங்களுக்கும் விச்வே தேவர்கள் ருஷிகள். இந்த நவகாண்ட ருஷி தர்பணத்தை தான் அத்யாயோபாகர்மாவில் நாம் செய்கிறோம். அதன் ஸ்வரூபத்தையும் தெரிந்துக் கொண்டு அனுஷ்டித்தால் பயனுள்ளதாக இருக்கும்.

இப்பொழுது கீழ்ச்சொன்ன ப்ரஜாபதி ஸோம அக்னி வைச்வதேவ காண்டங்கள் ஸங்கீர்ணமாக உள்ளன. ஒன்றோடு ஒன்று கலந்திருக்கிறது. இருப்பினும் எப்படி படிக்கப்பட்டுள்ளதோ அவ்வாறே அத்யயனம் செய்ய வேண்டும். இப்பொழுது நாம் அத்யயனம் செய்யும் பாடத்திற்கு ஸாரஸ்வத பாடம் என்று பெயர். ஸரஸ்வதி தேவி தன் பிள்ளையான ஸாரஸ்வதனுக்கு இந்த க்ரமத்தில் தான் உபதேசம் செய்தாள். ஸரஸ்வதி தேவி மூலம் வந்த பாடமானபடியால் இதில் மாற்றம் செய்யக்கூடாது. இவ்வாறு பல பாட க்ரமங்கள் உள்ளன.

வேதத்தின் பெருமையை மனு முதலிய மஹர்ஷிகள் ரொம்பவும் விசேஷமாகச் சொல்லியுள்ளார்கள். வேதாத்யயனம் செய்தவர்கள் தான் ராஜ்ய புரிபாலனம் செய்யத் தகுதி உடையவர்கள் என்று கூறியுள்ளனர். இருப்பினும் தத்காலத்தில் நாம் செய்ய வேண்டியது நமது குழந்தைகளை முடிந்தவரை வேதாத்யயனம் செய்யும்படி பண்ணிவித்து, வேதாத்யயனம் செய்தவர்களுக்கு தகுந்த ஸத்காரம் பண்ணுவதேயாகும்.

## தேசிக மொழி

“பெருமாளும் பிராட்டிமாரும் இருக்க நான் என்ன கொடுப்பது?” என்று கோதா பிராட்டி வினவ, அம்மா! நீ அவதரித்து அம்ருதமயமான திருப்பாவை மற்றும் திருமொழி அருளிய பிறகு அதுபோலவே நூல் இயற்ற ஆவல் கொண்ட கவிகள் யாவரும் உனது அருள்பெற்றல்லது அவ்வித நூல் அமைப்பது ஸாத்யமன்று என்று நிச்சயித்து உன்னையே சரணமடைகின்றனர். ஆகவே அடியேனும் உன் கருணையை வேண்டி நிற்கிறேன்.

– ஸ்ரீ கோதாஸ்துதி

**Sponsorships and donations towards publication expenses are welcome**







ஆடி கருடன் - கஜேந்த்ர மோக்ஷம்



ஸ்ரீ:



ஆடி கருடன் - கஜேந்த்ர மோக்ஷம்







மாதப்பிறப்பு உத்ஸவம்







சதயம் - பேயாழ்வார் உத்ஸவம்



ஏகாதசி புறப்பாடு









ஹஸ்தம் புறப்பாடு

ஸ்ரீ:

கண்ணுக்கினியன



**தேசிக ஸந்தேசம் 100-வது இதழ் வெளியீட்டு விழா**







தேசிக ஸந்தேசம் 100-வது இதழ் வெளியீட்டு விழா







## தேசிக ஸந்தேசம் 100-வது இதழ் வெளியீட்டு விழா

















ஸ்ரீ:





## தேசிக ஸந்தேசம் 100-வது இதழ் வெளியீட்டு விழா

















# ஸ்ரீ அபயப்ரதாந ஸாரம் ⑦

## அதிகாரம் - 3 - சரணாகதி தாத்பர்ய ப்ரபஞ்ச: கிஷ்கிந்தா காண்டத்தில் சரணாகதி

ஸ்ரீ சோகத்தூர் ஸ்ரீவத்ஸன், நங்கநல்லூர்

இதுவரை பால-அயோத்யா-ஆரண்ய காண்டங்களில் சரணாகதி தர்மாநுஷ்டானத்தைக் காட்டி ஸ்ரீமத்ராமாயணம் முழுவதுமே சரணாகதி தர்மத்தைப் போதிப்பதற்காகவே அவதரித்தது என்று ஸ்வாமி தேசிகன் நிர்தாரணம் செய்தருளினார். இனி, கிஷ்கிந்தா காண்டத்தில் அநுஷ்டிக்கப்பட்ட சரணாகதியின் வைபவத்தை ஆசார்யவள்ளல் கொண்டாடுகிறார்.

**ஸுக்ரீவ சரணாகதி**

ஸ்ரீராமபிரான் ஸுக்ரீவனின் ப்ரார்தனைக்கிரங்கி வாலியை வதம் செய்து, ஸுக்ரீவனுக்கு மீண்டும் கிஷ்கிந்தா ராஜ்யத்தையும், அவன் இழந்த மனைவியையும் பெற்றுக்கொடுத்தார். இவ்வாறு, பெருமாள் செய்த உபகாரத்திற்குப் பிரத்யுபகாரமாக சீதாந்வேஷண கைங்கர்யத்தைத் தான் அங்கீகரித்தான். ஆனால் பட்டாபிஷேகத்திற்குப் பின், நீண்டகாலம் இழந்திருந்த ராஜ்யத்தையும், கிராம்ய ஸுகங்களையும் மீண்டும் அடைந்த மகிழ்ச்சியில் மூழ்கி, ராமபிரானுக்குக் கொடுத்த வாக்குறுதியை மறந்து, குறிப்பிட்ட காலத்தில் வரவில்லை. இதனால், ஸீதா பிராட்டியின் பிரிவாற்றாமையில் இருந்த ஸ்ரீராமபிரான் மிகுந்த வருத்தமடைந்தார். இதனைப் பார்த்த இளையபெருமாள், ‘‘வானரனான ஸுக்ரீவனுக்கு நிலையான புத்தி இல்லை. ஸாதுக்கள் கடைபிடிக்கும் வைராக்யம் இவனுக்கு கிடையாது. தங்களிடம் அக்னிஸாக்ஷியாக செய்த உடன்படிக்கையை மறந்து, அல்ப ஸுகங்களில் ஆழ்ந்து போயிருக்கிறான். தங்களின் மகத்தான உதவிக்குப் ப்ரத்யுபகாரம் பண்ண வேண்டும் என்ற எண்ணம் இல்லாமல் கொடுத்த வாக்குத் தவறியவனாக இருக்கும் ஸுக்ரீவனை இப்பொழுதே வதம் செய்யப் போகிறேன்’’ என்று மிகுந்த சீற்றத்துடன் கூறினார். இதைக் கேட்ட சக்ரவர்த்தித்



திருமகன், ''லக்ஷ்மணா! மிகவுயர்ந்த ஒழுக்கத்தை உடைய நீ இந்த முடிவை மாற்றிக்கொள்ள வேண்டும். முன்பு ஸுக்ரீவனுடன் நாம் கொண்டிருந்த நட்பையும் அன்பையும் தொடருவாயாக. உன்னைப் போன்ற உத்தமன், நண்பனைக் கொல்லும் பாவச்செயலை செய்யலாகாது. கடுமையான சொற்களை முற்றிலுமாக விட்டு, ஸீதையைத் தேடுவதற்கான காலக்கெடு கடந்துவிட்டதென அவனுக்கு சாந்தமான முறையில் நீ நினைவூட்ட வேண்டும்'' என்றார்.

இருப்பினும், பெருமாள் மற்றும் பிராட்டி மீது கொண்ட மிகுந்த ப்ரீதி மற்றும் பக்தியினால் உந்தப்பட்டு, தமையனின் துக்கத்தினால் மிகுந்த சீற்றத்தில் சூழப்பட்டவராக, மரங்களைச் சாய்த்துக்கொண்டும், மலைச்சிகரங்களைப் பெயர்த்து எறிந்து கொண்டும், பாறைகளை உருட்டித் தள்ளிக் கொண்டும், தம் திருவடிகளால் நீண்ட அடிகளிட்டும், ஒரு ஸிம்ஹம் போல கர்ஜித்துக் கொண்டும் லக்ஷ்மணர் கிஷ்கிந்தையை நோக்கி விரைந்தார்.

இதனை அங்கதன் ஸுக்ரீவனிடத்தில் தெரிவிக்க, அதனால் மிகுந்த பயமும் மனக்குழப்பமும் உடையவனாய், லக்ஷ்மணரின் சீற்றத்தைத் தணிக்கத் தன் மந்த்ரிகளிடத்தில் ஆலோசனை செய்தான்.

வாயுபுத்ரனான அனுமன், ஸுக்ரீவனை நோக்கி:

*க்ருதாபராதஸ்ய ஹி தே நாந்யத் பச்யாம்யஹம் க்ஷமம் |*
*அந்தரேணாஞ்ஜலிம் பத்த்வா லக்ஷ்மணஸ்ய ப்ரஸாதநாத் ||*
*[கிஷ். கா. 32-17]தி*

''வானரக்கூட்டங்களின் தலைவரே! ஸ்ரீராமனிடத்தில் அபராதம் செய்துவிட்ட தாங்கள், அவரை அமைதி கொள்ளச் செய்வதற்காக லக்ஷ்மணர் முன், கைகூப்பி வணங்கி, அபராத க்ஷமாபணம் பண்ணுவதைத் தவிர, பயனளிக்கக்கூடிய வேறு எந்தவொரு வழியையும் நான் காணவில்லை. ராமன், சினங்கொண்டு கையில் வில்லை எடுத்தாரேயானால், தேவர்–அசுரர்–கந்தர்வர் உள்ளிட்ட உலகனைத்தையும் தன் கட்டுப்பாட்டில் நிலைநிறுத்த வல்லவர். அவரிடத்தில் ஏற்பட்ட அபராதத்தைப் போக்கிக்கொள்ள, இராம-லக்ஷ்மணர்களிடத்தில் அடிபணிந்து, தங்களின் பிழையைப் பொருத்தருளுமாறு வேண்டிக்கொள்ள வேண்டும்'' என்று ஸந்மந்த்ரியான (நாட்டிற்கும், மன்னனுக்கும் ஹிதத்தை மட்டுமே தரக்கூடிய ஆலோசனையை அவச்யம் எடுத்துக்கூறும் மந்த்ரி) அனுமன் தர்மோபதேசம் பண்ணினார்.

தன் தமையனின் மனவருத்தத்தால் மிகுந்த சினத்துடன் இருந்த இளையபெருமாள், ஸுக்ரீவனைப் பார்த்து:

*ந ச ஸங்குசித: பந்தா: யேந வாலீ ஹதோகத: |*
*ஸமயே திஷ்ட ஸுக்ரீவ மா வாலிபதமந்வகா: ||*
*[கிஷ். கா. 34-18]*

''''ஸுக்ரீவனே! வதம் செய்யப்பட்ட வாலி எந்த வழியாகச் சென்றானோ, அந்தப் பாதை இன்னும் அடைக்கப்படவில்லை! உன் வாக்குறுதியைக் காப்பாற்றி உயிரைத் தக்க வைத்துக்கொள்! வாலி சென்ற பாதையில் அவனைப் பின் தொடர்ந்து செல்லாதே. இக்ஷ்வாகு வம்ச திலகாமான ஸ்ரீராமச்சந்திரனின் வில்லிலிருந்து வெளிப்படும் பாணங்கள் வஜ்ராயுதத்திற்கு ஸமமானவை என்பதை நீ அறியவில்லை. அதனால்தான் சிற்றின்பங்களில் மூழ்கிக் கிடக்கிறாய். ஸ்ரீராமனிடத்தில் செய்த உடன்படிக்கையை மனத்தால் கூட எண்ணிப் பார்க்காமலிருக்கிறாய்'' என்று எச்சரிக்கை விடுத்தார்.

அனுமன் முன் பண்ணின உபதேசத்தை உள்ளது உள்ளபடி அங்கீகரித்த வானரகூட்டத் தலைவன்:

*யதி கிஞ்சிததிக்ராந்தம் விச்வாஸாத் ப்ரணயேந வா |*
*ப்ரேஷ்யஸ்ய க்ஷமிதவ்யம் மே ந கச்சிந்நாபராத்யதி ||*
*[கிஷ். கா. 36-11]*

''ஸுமித்ரையின் மைந்தரே! தர்மாத்மாவான ஸ்ரீராமன், அளவிடமுடியாத தன் தேஜஸ்ஸாலேயே ராவணனை வதம் செய்யப்போகிறார். ஸீதா பிராட்டியைத் திரும்பவும் அடையப்போகிறார். அடியேன் அவருக்கு ஓர் அல்ப ஸேவகனாகவே இருப்பேன். மாவீரரான ஸ்ரீராமபிரானுக்குப் பின்னாலே செல்வேன். அவர் கோபம் கொள்ளமாட்டாரென்ற நம்பிக்கையாலும், அவர் என்மீது கொண்ட ஸ்நேஹ பாவத்தினாலும், அடிமையானவன் நான். உங்களால் ஏவப்படுபவனான அடியேன் முறை தவறி ஏதேனும் பிழை செய்திருந்தால், ஸ்வாமியான தாங்கள் அதனை க்ஷமித்தருள வேண்டும். இவ்வுலகில் பிழையே செய்யாதவர்கள் என்று எவரேனும் உண்டோ?'' என்று இளையபெருமாளிடத்தில் சரணாகதி பண்ணினான்.

அவன் பண்ணின சரணகாதியால் சாந்தமடைந்த லக்ஷ்மணர், ''வானர ச்ரேஷ்ட! உன்னைப்போல பணிவை உடையவரை ஸ்ரீராமன் துணையாகப் பெற்றிருக்கிறார். பேராற்றல், நேர்மை ஆகிய நற்குணங்கள் உடைய உன் உதவியைப் பெற்று புருஷோத்தமரான ஸ்ரீராமன் விரைவில் எதிரிகளை அழிக்கப்போகிறார் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

*யச்ச சோகாபிபூதஸ்ய ச்ருத்வா ராமஸ்ய பாஷிதம் |*
*மயாத்வம் பருஷாண்யுக்த: தச்சத்வம் க்ஷந்துமர்ஹஸி ||*
*[கிஷ். கா. 36-20]தி*

வீரனே! துக்கத்தில் சிக்கித் தவிக்கும் என் தமையனுடைய சொற்களைக் கேட்டதும் எனக்கு



மிகவும் சீற்றம் ஏற்பட்டது. அதனாலேயே உன்னிடத்தில் கடுமையாகப் பேசிவிட்டேன். என்னை மன்னிப்பாயாக!'' என்று தான் ஸுக்ரீவனிடத்தில் அபராதக்ஷமாபனம் வேண்டினார்.

அபராதமே செய்திருந்தாலும் பரமபாகவதனான ஸுக்ரீவனை சுடுசொற்கள் கொண்டு நிந்திப்பது அடுக்குமோவென்னில், ''இளையபெருமாள் தம்முடைய பாருஷ்ய-வாக்யங்களுக்கடி சோக பரவசரான பெருமாளுடைய சீற்றத்தளவில் பிறந்த பாசுரங்கள் என்று தம்முடைய அபராதத்தை சோபாஹிதமாக்கி மேலெழுச்சியான பெருமாளுடைய பாசுரங்களுக்குக் காரணம் 'காமன் செய்தான்', 'மந்யு செய்தான்' என்கிற கணக்கிலே சோகமேயாயிற்று''. - ஸ்வாமி தேசிகன் அத்புதமாக ஸமாதானம் ஸாதித்தருள்கிறார்.

இங்கே ''சோபாஹிதமாக்கி'' என்பதன் பொருள், ஒரு காரணத்தை முன்னிட்டு தனக்கு கோபம் உண்டானது என்பதனைக் காட்டுவது. மேலெழுச்சியான என்பதற்கு, இளையபெருமாளுக்கு ஸுக்ரீவனை ஹார்தமாக சிக்ஷிக்க வேண்டுமென்பதில் நோக்கு இல்லையாயினும், **காம: அகார்ஷீத்; மந்யு: அகார்ஷீத்** - நாம் எதேனும் தவறு செய்தால் காமம் (ஆசை) தான் அதைச் செய்ய வைத்தது என்றும் கோபம்தான் (மந்யு:) செய்ய வைத்தது என்றும் ப்ராயச்சித்தம் ப்ரார்த்திப்பது போல, இங்கும் மநுஷ்யத்வ அபிநயத்தை அநுஷ்டித்த இளையபெருமாளின் கடுமையான வார்த்தைகள், மநுஷ்யர்களுக்கே உரிய காம-க்ரோதாதிகளின் வெளிப்பாடாகவே கொள்ள வேண்டும் என்று அத்யத்புதமாய் ஸ்தாபிக்கிறார் நம் ஆசார்யவள்ளல்.

மேலும், ஒரு ஸ்ரீவைஷ்ணவர் தவறு செய்துவிட்டார். அந்தத் தவறுக்காக வருந்தி, ப்ராயச்சித்தமும் செய்துகொண்டாரென்னில், அவர் தவறு செய்த காலத்தில் அவரைப் பற்றி நாம் கொண்டிருந்த அபிப்ராயத்தை அதன் பின்னரும் தொடரக்கூடாது. அவர் அபராதக்ஷாபணம் பண்ணிய பின்பு, அவரை மீண்டும் ஸஹஜமாகவே பாவிக்க வேண்டும். மேலும், அவர் அபராதியாக இருந்த காலத்தில் அவரை அநாதரித்திருந்தால், அதற்காக நாமே அவரிடத்தில் அபராதக்ஷாபணம் பண்ண வேண்டும் என்பதே சாஸ்த்ர நியதி. இந்த நியதியை, பெருமாளிடத்தில் அபராதியாகிய ஸுக்ரீவனை முன்பு சுடுசொற்களால் நிந்தித்த இளையபெருமாள், பின்னர் அவன் அதற்கு வருந்தி அபராதக்ஷாபணம் பண்ணியதை முன்னிட்டு, அவனிடத்தில் தாமும் அபராதக்ஷாபணத்தை லோகஸங்க்ரஹார்த்தமாக அநுஷ்டித்து, இந்தச் சாஸ்த்ர நியதியை உலகிற்குக் காட்டியருளினார்.

இதுவரை விபீஷண சரணாகதி வ்ருத்தாந்தத்திற்கு முற்பட்ட ஸ்ரீமத் ராமாயண நிகழ்வுகளில் அநுஷ்டிக்கப்பட்ட சரணாகதி தர்மத்தை ஆசார்யன் ஸ்பஷ்டமாக தெரிவித்தருளினார். இனி விபீஷண சரணாகதிக்கு பின்னர் நடந்த சில விஷயங்களைக் காட்டுகிறார்.

லங்கையில் ஸீதா பிராட்டி இருப்பதை அனுமன் உறுதிசெய்த பின்பு, ராவணனை வதம் செய்து, அவளை மீட்கத் திருவுள்ளம் பற்றிய பெருமாள் ராவணனுடன் யுத்தம் புரிய லங்கைக்குச் செல்ல வேண்டியிருந்தது. ஆனால், வானர ஸேனையுடன் பரந்த ஸமுத்ரத்தை எவ்வாறு கடப்பது என்று ஆலோசனை நடந்தபோது, சரணாகதியின் மஹிமையை நன்குணர்ந்த விபீஷணர், அசக்தன் ஒரு பலனைஉத்தேசித்து சக்தனை அடைவதே நியதி என்று சொல்லி,

**ஸமுத்ரம் ராகவோ ராஜா சரணம் கந்துமர்ஹஸி (யுத். கா. 19-31)** – ''அரசனாகிய ஸ்ரீராமர் ஸமுத்ர ராஜனைச் சரணமடைய வேண்டும்'' என்று விண்ணப்பித்தார்.

பரம தார்மிகரான விபீஷணாழ்வாரின் வார்த்தைக்கிணங்கி ஸ்ரீராமன் ஸமுத்ர ராஜனிடத்தில் ப்ரார்திக்க, அவனோ பெருமாளின் ப்ரார்த்தனைக்கு செவி சாய்க்கவில்லை. இதனால் சீற்றமடைந்த பெருமாள்,

*சாபமானய ஸௌமித்ரே சராம்ச்சாசீ விஷோபமாந் |*
*ஸாகரம் சோஷயிஷ்யாமி பத்ப்யாம் யாந்து ப்லவங்கமா ||*
*[யுத். கா. 21-22]*

லக்ஷ்மணா! என்வில்லையும் ஸர்ப்பம் போன்று விஷத்தை உமிழக்கூடிய பாணங்களையும் கொண்டுவா. ஸமுத்ரத்தை வற்றடித்து விடுகிறேன். நம் வானரவீரர்கள் காலாலேயே நடந்து சென்று கடலைக் கடக்கட்டும்'' என்றார்.

அசக்தன் விரும்பிய பலனை அடைவதற்காக சக்தனைச் ஆச்ரயித்திருப்பதே உலக நியதி. எனினும், சரணாகதி யாரிடத்தில் அநுஷ்டிக்கப்படுகிறது என்பதே அதில் மிக முக்யமான அம்சமாகும். இவ்விடத் தில், ஸமுத்ர ராஜன் அல்ப புத்தியும் அல்ப சக்தியும் உடையவனாக இருந்தமையால், அவனிடத்தில் பண்ணப்பட்ட சரணாகதிக்குப் பலஸித்தி இல்லாமல் போனது என்று ஸ்வாமி தேசிகன் அருளிச்செய்கிறார்.

இதே கருத்தை ஆசார்யனே ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரம் - உபாயவிபாகாதிகாரம், உக்தி நிஷ்டை-ஆசார்ய நிஷ்டை ப்ரகரணத்தில் விஸ்தரித்தருள்வது இங்கே அநுஸந்திக்கத்தக்கது.

பின்பு யுத்தாரம்பத்திற்கு முன்பாக எதிரிகளிடத்திலும் வாத்ஸல்யத்தைக் (குற்றம் பாராமை) காட்டும் பெருமாள்,

*அராக்ஷஸமிமம் லோகம் கர்த்தாஸ்மி நிசிதைச்சரை: |*
*நசேச்சரணமப்யேஷி மாமுபாதாய மைதிலீம் ||*
*[யுத். கா. 41-66]*

''ஸீதையைக் கொண்டுவந்து ஸமர்ப்பித்து விட்டு தன்னைச் சரணமடையாவிட்டால், என் கூர்மையான பாணங்களால் உலகில் தீயகுணம் படைத்த ராக்ஷஸர்கள் அனைவரையும் பூண்டோடு ஒழித்து விடுவேன். நற்குணம் படைத்த விபீஷணர் போன்ற தர்மாத்மாக்கள் எந்தவொரு தொல்லையும் இல்லாமல் ராஜ்ய சாஸநம் பண்ணும்படியும் செய்வேன்'' என்று இராவணனுக்கு அங்கதன் மூலமாக தூது அனுப்பி, தன்னுடைய ஸர்வ சக்தித்வத்தையும், பரம காருணிகத்தவத்தையும், ஹித-ப்ரவர்த்தகத்தையும் ப்ரகாசிப்பித்தார்.

இனி, சரணாகதர்களின் ரக்ஷண விஷயத்தில் பெருமாளும் பிராட்டியும் ஸமாநமான அபிப்ராயத்தை உடையவர்கள் என்பதை, பிராட்டியிடத்தில் அநுஷ்டிக்கப்பட்ட சரணாகதியின் மூலம் ஸ்வாமி தேசிகன் நமக்கு

**(தொடரும்...)**


## ஆஸ்திகர்களுக்கு ஓர் அறிவிப்பு

பித்ரு காரியங்கள் செய்வதற்கு, சென்னை மயிலை ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானத்திற்குச் சொந்தமான (G.K. மண்டபம் அருகில்) அறைகள் வாடகைக்கு விடப்படும்.

விவரங்களுக்கு தேவஸ்தான அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்,**
4/11, கேசவ பெருமாள் கோயில் சன்னதி தெரு,
மயிலாப்பூர், சென்னை 600 004. தொலைபேசி: 044-2495 3799.

ஸ்ரீ:

# தேசிகனும் கோபாலனும்

ஸ்ரீமதி பழவேரி ரமா ராகவஸிம்ஹன்

**தாய் நினைந்த கன்றேயொக்க என்னையும் தன்னையே நினைக்கச் செய்து தான் எனக்காய் நினைந்தருள் செய்யும் அப்பனை** (7-3-2) என்று பெரிய திருமொழியில் திருமங்கை ஆழ்வார் ஸேவித்ததென்னவோ திருநறையூர் மகரக்குழைக்காதனை என்றாலும், தேசிகனல்லால் தெய்வமில்லை என்று வர்த்திப்போர்க்கு இவை ஆசார்யனுக்கான பதங்களாகவே தோன்றும்.

ஸ்ரீஆளவந்தார் அருளிய ஸ்தோத்ர ரத்னம், சது:ச்லோகீ, கீதார்த்த ஸங்க்ரஹம் ஆகிய ஸம்ஸ்க்ருத க்ரந்தங்களின் சீரிய பொருளினை அனைவரும் அறிந்து உய்ய வேண்டுமென்பதற்காக ஸ்தோத்ர ரத்ன பாஷ்யம், சதுச்லோகீ பாஷ்யம், கீதார்த்த ஸங்க்ரஹ ரக்ஷை என்று எளிமைப்படுத்தியவர் ஆசார்யன் தேசிகன். ஸ்ரீபாஷ்யகாரரின் கீதா பாஷ்யத்திற்கு தாத்பர்ய சந்த்ரிகை எனும் உரையினை அருளிய ஆசார்யன், ஸ்ரீபாஷ்யத்தின் சாரீரக சாஸ்த்ரத்தினை அதிகரண ஸாராவளி எனும் க்ரந்தத்தில் ஸாதித்தருளினார்.

இப்படி தத்வ ஹித புருஷார்த்த விஷயங்களை ஆச்ரிதர் உய்யத் தெளிவுற விவரித்த ஆசார்யன் எம்பெருமானின் ஸௌந்தர்யத்தில் லயித்து பேரின்பத்தில் ஆழ்ந்த க்ரந்தங்களும் பல. ஆசார்யன் அணுஅணுவாக அநுபவித்து ஸேவித்த க்ரந்தங்களுள் கோபால விம்சதியும் ஒன்று. எம்பெருமானின் திருவுருவ அழகினை மட்டுமல்லாமல் அந்த ரசமயனின் லீலைகளையும் அத்யத்புதமாகக் காண்பிக்கும் கோபால விம்சதியில் அந்வயித்து ஆநந்திப்போம்.

**ப்ருந்த ரக்ஷகன் கோபாலன்**

**வந்தே ப்ருந்தாவன சரம் வல்லவீ ஜன வல்லபம்...** (கோபால விம்சதி - 1)

எங்குத்தான் என்று ஆய்ப்பாடியோர் கேட்டிருந்தாலும் கோபாலன் இருந்ததென்னவோ ப்ருந்தாவனத்தில் தான். அதுவும் கோபாலனை கோ பாலனாக அனைவரும் கண்டது ப்ருந்தாவனத்தில் தான். கண்ணனெனும் கருந்தெய்வத்தினை ஒருத்தி காட்சிப் பழகிக் கிடந்தது ப்ருத்தாவனத்தில் தான். எங்குமுளன் கண்ணன் என்று அவனைக் கொண்டாடினாலும், விருந்தாவனத்தே கண்டோமே என்று சாக்ஷி சொன்னவர் பலர். ஆச்ரிதற்காக பூமிப்பிராட்டி விருந்தாவனத்தே கடைசியாகக் கண்ட கோபாலனை, ஆசார்யன் தேசிகன் **ப்ருந்தாவன சரம்** (ப்ருந்தாவனத்தில் ஸஞ்சரிப்பவன்) என்று ச்லோகத்தினைத் தொடங்கி ஆரம்பத்திலேயே காண்பித்துக் கொடுத்தார்.

*பரித்ராணாய ஸாதூநாம் விநாசாய ச துஷ்க்ருதாம் |*
*தர்ம ஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே ||*



ஸாதுக்களைப் பரித்ராணம் செய்வதைத் தனது ப்ரதான லக்ஷ்யமாகக் கொண்டு எம்பெருமான் அவதாரங்கள் கொள்கிறான் என்ற வாக்கிற்கு ப்ரமாணமானது கோபாலனாக ப்ருந்தாவனத்தில் அவன் வர்தித்த அழகு. இதற்குக் கட்டியம் கூறுவதாய் அமைந்தது **ப்ருந்தாவன** (1) என்று கோபால விம்சதியில் ஸ்வாமி ஸாதித்த பதம்.

**ப்ருந்த + அவனம்** – கூட்டங்களை ரக்ஷித்தல்.

- மேய்த்தது – **கோ கூட்டங்களை.**
- களித்து மகிழ்ந்து விவாஹம் புரிந்தது – கோபிகைகள் **கூட்டத்தினை.**
- வர்தித்தது – இடையர் **கூட்டத்துடன்.**
- கரை சேர்த்தது – ப்ருந்தாவனக் **கூட்டத்தினை.**

**அவதார காரணம்** – ஸாதுக் கூட்டங்களை (முனிச்ரேஷ்டர்கள் / ஸாத்விகர்கள்) ரக்ஷித்தல்.

- ப்ருந்தாவனத்தில் (குருகுலத்தின் திருநாமம்) கற்றுத்தேர்ந்து உடன் பயின்றோரை ரக்ஷித்தான்.
- குற்றமொன்றில்லாத கோவலர்களுடன் ஸஞ்சரித்து அவர்களை ரக்ஷித்தான்.
- எண்ணிக்கையிலடங்கா கோபிகைகளுடன் கூடிக் களித்து அவர்களை ரக்ஷித்தான்.
- பதினாயிரம் பெண்டிரை மோஹித்து விவாஹம் புரிந்து அவர்தம்மையும் ரக்ஷித்தான்.

கோபாலனது ப்ருந்தாவன ரக்ஷணத்தையும் **பரித்ராணாய ஸாதூநாம்...** பதங்களையும் கோர்த்துப் பார்த்தோமானால் **ப்ருந்த பரித்ராணம்** எனும் அற்புதம் புலப்படும்.

இப்படி **ப்ருந்த பரித்ராணம்** – ப்ருந்தங்களை (கூட்டங்கள் / குழாங்கள்) ரக்ஷிப்பதில் அவன் ஈடுயிணையற்றவன் என்பதற்கு கட்டியம் கூறும் ஆழ்வார் பாசுரங்கள் சில:

- ஏடு நிலத்தில் இடுவதன் முன்னம்வந்து எங்கள் குழாம்புகுந்து (பெரியாழ்வார் திருமொழி 1-1-4).
- தூராத மனக்காதல் தொண்டர் தங்கள் குழாம் குழுமித் திருப்புகழ்கள் பலவும் பாடி ஆராத மனக் களிப்போடு அழுத கண்ணீர் மழை சோர நினைந்து உருகி ஏத்தி (பெருமாள் திருமொழி 1-9).
- குழாங்கொள் தென் குருகூர்ச் சடகோபன் தெரிந்துரைத்த குழாங்கொள் ஆயிரத்துள் இவை பத்தும் உடன் பாடி குழாங்களாய் அடியீருடன் கூடிநின்றாடுமினே (திருவாய் மொழி 2-3-11).
- பல்லாயர் குழாம் நடுவே கோலச் செந்தாமரைக் கண்மிளிரக் குழலூதி இசைபாடிக்குனித்து ஆயரோடு ஆலித்து வருகின்ற ஆயப்பிள்ளை (பெரியாழ்வார் திருமொழி 3-4-7).

**கள்வனின் கள்ளத்தனம்**

*ஹர்த்தும் கும்பே விநிஹிதகர: ஸ்வாது ஹையங்கவீநம்*
*த்ருஷ்ட்வா தாமக்ரஹண சடுலாம் மாதரம் ஜாதரோஷாம்*
*பாயாதீஷத் ப்ரசலிதபதோ நாபகச்சந் ந திஷ்ட்டந்*
*மித்யாகோப: ஸபதி நயநே மீலயந் விச்வகோப்தா*
(கோபாலவிம்சதி – 5)

''தனக்குப் பிடித்தமான வெண்ணெயினை அள்ளி புஜிக்க தனது கையினைத் தாழியின் அடி ஆழம் வரை செலுத்தியவன், தனது அன்னையாம் யசோதையின் பார்வையில் சிக்குண்டான். அவளிடமிருந்துத் தப்பிச் செல்ல எந்த விதமான ப்ரயத்தனமும் செய்யாது தனது நேத்ரங்களை மூடிக் கொண்டான்.'' இது இந்த ச்லோகத்தின் நேரடியான அர்த்தம்.

இனி, நம் ஸ்வாமி தேசிகன் இந்த ச்லோகத்தில் அந்வயிக்கும் பாங்கினைக் காண்போம்.

**ஹர்த்தும்** என்று ச்லோகத்தினைத் தொடங்கி யாசித்துப் பெற முடியாததை அவன் களவாடுகிறான் என்பதைக் காட்டினார். ஸ்ரீவைகுண்டத்திலோ திருப்பாற்கடலிலோ அகப்படாத அதிருசியான வஸ்து வெண்ணெய். இதனாலேயே உயர்வற உயர் நலம் உடையவனான அவனுக்கே அந்த வெண்ணெய் பரம போக்யமான வஸ்துவானது. அத்தகைய விசேஷமான வஸ்துவினை இழக்க அவனது திருவுள்ளம் இடம் கொடுக்கவில்லை.

இந்த ச்லோகத்தில் நம் ஸ்வாமி காண்பிக்கும் மற்றொரு ஸ்வாரஸ்யம் **த்ருஷ்ட்வா** எனும் பதம். களவாடும் போதில் களவாடப்படும் வஸ்து ஸ்பர்சம் உண்டாகும் ஸமயத்தே ஜாக்ரதை உணர்வினால் சுற்றும் முற்றும் பார்ப்பது வழக்கம். இந்தக் கள்வனும் சுற்றும் முற்றும் பார்க்கிறான்.

யசோதையானவள் அவனது களவினைக் கண்டு பிடித்து விட்டதோடு அவனுக்கு தண்டனை அளிப்பதற்காகத் தாம்புக் கயிற்றினைத் தேடிக் கொண்டிருக்கிறாள். என்ன செய்வதென்று புரியாத அந்தக் கள்வனோ தப்பிக்க ப்ரயத்தனங்கள் மேற்கொள்ளவில்லை. தனது நேத்ரங்களை மூடிக் கொண்டான். சேதன, அசேதனமென்று அனைத்தும் அவனது கடாக்ஷத்திற்காகக் காத்திருக்க, **விச்வகோப்தாவான** (ஸர்வ ரக்ஷகன்) அவனோ தனது அன்னைக்கு பயந்து (என்ன தவம் செய்தனை யசோதா!) தனது நேத்ரங்களை மூடிக் கொண்டான். அனைத்துமான தான் தன் நேத்ரங்களை மூடிக் கொண்டால் தனது அன்னையின் நேத்ரமும் தானாக மூடிக் கொள்ளும். தப்பித்து விடலாமென்று எண்ணினானோ அந்த மாயாவி!

**கோபாலனின் சிரிப்பும் பயமும்**

கோபாலன் மருத மரங்களை சாய்த்த வ்ருத்தாந்தத்தினைப் பேசும் **பரிவர்த்தித கந்தரம் பயேந** எனத் தொடங்கும் ஏழாவது ச்லோகத்தில் **ஸ்மித புல்லாதர பல்லவம் ஸ்மராமி** எனும் பதங்கள் ரஸம் மிகுந்தவை. இதே வ்ருத்தாந்தத்தினைப் பேசும் எட்டாம் ச்லோகத்தில் **யமளார்ஜுந த்ருஷ்ட பால கேளிம்** எனும் பதங்கள் பேரானந்த அநுபவத்தினை தர வல்லவை.

யசோதை இந்த மாயாவி நகர முடியாத வண்ணம் அவனை உரலில் கயிற்றினால் கட்டினாள். **பயக்ருத் பயநாசன:** என்று கொண்டாடப்படுபவனுக்கு பயமாம். சிக்ஷிக்க யசோதை வருகிறாளா என்று தலையைத் திருப்பிப் பார்த்தவன் சிரித்தானாம். பயப்படும் போதில் சிரிப்பு எதற்கு!

1. அனைத்தும் தன் அதீனத்தில் இருக்க, தான் தனது அன்னையிடம் அடங்கி இருப்பதை நினைத்து ஸ்மிதம் (சிரிப்பு)
2. ஶ்ரீராமனாக தேவர்களுக்கும், ராக்ஷஸ ராக்ஷஸிகளுக்கும், முனிச்ரேஷ்ட்டர்களுக்கும், வானரங்களுக்கும், ஸாமான்யர்களுக்கும், அசேதனங்களுக்கும் அபய ப்ரதானம் அநுக்ரஹித்த தான் யசோதையிடம் பயப்படுவதை நினைத்து ஸ்மிதம்
3. நிலங்கோட்டிடைக் கொண்டவனான தான் அதே பூமியின் மீது தவழ்ந்து கொண்டிருப்பதை எண்ணி ஸ்மிதம்
4. ஸர்வ சக்திமானான தன்னால் இரண்டு உரல்களை இழுக்க முடியாது என்று எண்ணிய தனது அன்னையை நினைந்து ஸ்மிதம்
5. பின்னாளில் கோவர்தன கிரியையே தூக்கிப் பிடிக்கப் போகின்றவனை சின்னஞ்சிறு உரலில் கட்டிப் போட்டுக் கட்டுப்படுத்தலாம் என்று எண்ணினாளே என்று ஸ்மிதம்
6. யமளார்ஜுந - இரண்டு அர்ஜுன மரங்கள். விச்வரூபம் ஸேவிக்கவிருக்கும் அர்ஜுனனின் ஜ்ஞாபகம் வந்ததனால் ஸ்மிதம்
7. மரங்களாய் நிற்கும் இரண்டு பேருக்கும் தாரதம்யமின்றிக்கே சாப விமோசனம் அளிக்க ஸங்கல்பித்து தானே அன்னையிடம் கட்டுண்ட ஸௌக்ஷ்மத்தினை நினைத்து ஸ்மிதம்
8. தனது லீலைக்கு சேதன (யக்ஷர்கள்), அசேதனங்கள் (இரண்டு ஸ்தாவரங்கள்) நேரடியாக ஸாக்ஷியானதைக் கண்டு ஸ்மிதம்
9. சக்ஷுஸ் இல்லாத அசேதனங்களான அந்த இரண்டு ஸ்தாவரங்களுக்குத் தனது (பகவத்) ஸம்பந்தத்தினால் பார்வை உண்டாயிற்றென்று ஸ்மிதம்
10. சிறு உரல் என்றாலும் பழைய மரங்களானபடியால் அவை முறிந்து விழுந்தன என்று அனைவரையும் நம்பவைக்கப் போவதை எண்ணி ஸ்மிதம்
11. யக்ஷர்களே மரங்களாகி நின்றதனால் சாபம் நீங்கி அவர்கள் மறையும் போதில் மரங்களும் மறைந்தால் பார்ப்போர்க்கு ஸந்தேஹம் வரும் என்பதனால் மரங்களை வீழச் செய்ய ஸங்கல்பித்த தனது ஸாமர்த்யத்தினை நினைத்து ஸ்மிதம்
12. ஸ்தாவரங்களில் கட்டிப் போட்டதனால் அசேதனமாகும் அவற்றிற்கு மோக்ஷம். கட்டிப் போடப்பட்ட சேதனங்களாகிய யக்ஷர்களுக்கும் சாப விமோசனம் என்பதை எண்ணி ஸ்மிதம்

**சிரித்தாலும் ஏன் பயம் கொண்டான்?**

1. யசோதை வந்து மேலும் சிக்ஷிப்பாளோ என்று பயம்
2. அப்படி அவள் சிக்ஷித்தால் அநுக்ரஹ கார்யம் விளம்பிக்குமே என்ற பயம்
3. இரண்டு யக்ஷர்களுக்கும் தான் ஸங்கல் பித்திருக்கும் அநுக்ரஹ ப்ரகாரத்தினை யாரேனும் கண்டு விடுவாரோ என்ற பயம்
4. தினந்தோறும் உண்டாக்கக் கூடிய வெண்ணெயினை களவாடியதற்கே கட்டிப் போட்ட அன்னை காலங்காலமாக ஓங்கி உயர்ந்து நிற்கும் மரங்களினை சாய்த்தால் எப்படியெல்லாம் சிக்ஷிப்பாளோ என்ற பயம்
5. இனி யசோதை விளையாடுவதற்குத் தன்னை க்ருஹத்தினை விட்டு வெளியே அனுப்புவாளோ மாட்டாளோ என்று பயம்
6. யசோதைத் தன்னை ரக்ஷிப்பதாய் எண்ணி வெளியே அனுப்பாவிட்டால் கோக்கூட்டங்களை மேய்ச்சலுக்குக் கூட்டிச் செல்ல முடியாதே என்று பயம்
7. கோபர்களுடன் விளையாட முடியாதே என்று பயம்
8. எல்லாவற்றையும்விட, ஏனைய க்ருஹங்களுக்குச் சென்று தயிர் வெண்ணெயினைக் களவாட முடியாதே எனும் பயம்

இங்கு நாம் அநுபவித்தது நம் ஸ்வாமி தேசிகன் ஸாதித்துக் களித்த மருதமர வ்ருத்தாந்தம் ஒன்றை மட்டுமே. ஆசார்யனின் விலக்ஷணமான க்ருஷ்ணாநுபவத்தில் மூழ்கி மகிழும் பாக்யமென்பது அவர்தம் அநுக்ரஹத்தினால் உண்டான ஸுபலன். அவர் கொண்டாடிய கோபாலனை **ஜயதி வல்லவ சக்ரவர்த்தீ** என்று நாமும் துதித்துய்வோம்.

ஸ்ரீ:

# கண்ணன் ஸுகஸேவ்யன்

ஸ்ரீமதி அனுராதா சேஷாத்ரி, பெங்களூரு

*வந்தே ப்ருந்தாவனசரம் வல்லவீஜன வல்லபம் |*
*ஜயந்தீஸம்பவம் தாம வைஜயந்தீ விபூஷணம் ||*

என்பது யாதவாப்யுதயத்தின் முதல் ச்லோகம். இந்த ச்லோகம் பல விசேஷ அர்த்தங்களை கொண்டதோடு, ஸ்வாமி தேசிகன் அருளிச் செய்த **கோபால விம்சதி** என்கிற ஸ்தோத்திரத்தின் முதல் ச்லோகமாகவும் அமைந்துள்ளது மற்றும் ஒரு விசேஷம். இந்த காவ்யத்திற்கு பல பண்டிதர்கள் வியாக்யானம் செய்துள்ளனர். அவற்றுள் அப்பய்ய தீக்ஷிதர் என்கிற அத்வைத ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த மஹான் அத்புதமாக வ்யாக்யானம் அருளிச் செய்துள்ளார்.

ஸ்வாமி தேசிகன் அருளிச் செய்த க்ரந்தங்களில் **யாதவாப்யுதயம்,** ஸ்ரீமத் பாகவதம், விஷ்ணு புராணம், ஹரி வம்சம் முதலிய இதிஹாஸ புராணங்களை ஆதாரமாகக் கொண்டு ஸ்வாமி தேசிகனால் இயற்றப்பட்ட மஹத்தான காவ்யம். ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் த்வய மந்த்ரம் **மந்த்ர ரத்னம்** என்றும் விஷ்ணு புராணம் **புராண ரத்னம்** என்றும் ஆளவந்தார் அருளிச்செய்த ஸ்தோத்ரம் **ஸ்தோத்ர ரத்னம்** என்றும் கொண்டாடப்படுகின்றது. அவ்வகையில் ஸ்வாமி தேசிகனின் இந்த ஸ்ரீஸூக்தி **காவ்ய ரத்னம்** என்றே போற்றப்படுகிறது.

எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் அநேக கல்யாண குணங்களை உடையவன். அவற்றுள் வாத்ஸல்யம், ஸௌசீல்யம், ஸௌலப்யம், ஸ்வாமித்வம் ஆகிய நான்கு குணங்களும் க்ருஷ்ணாவதாரத்தில் எவ்விதம் ப்ரகாசிக்கின்றது என்பதை இந்த முதல் ச்லோகத்தின் மூலம் ஸ்வாமி தேசிகன் திருவுள்ளப்படி அவர் அருளிச்செய்த வியாக்யானத்தை சற்றே அனுபவிக்கலாம். இந்த ச்லோகத்தை, ஸ்வாமி தேசிகன் **வந்தே** என்று தொடங்குவது ஒரு விசேஷம் **அஞ்சலிம் யாசமாந:** என்று நம்மிடம் கேட்டுப் பெற்று நமக்கு ஸத்தையை உண்டாக்குபவன் மாயக்கண்ணன். இந்த அஞ்சலி,

*த்வதங்க்ரிம் உத்திச்ய கதாபி கேநசித்*
*யதா ததா வாபி ஸக்ருத் க்ருதோऽஞ்ஜலி: |*
*ததைவ முஷ்ணாத்யசுபாந்யஷேஷத:*
*சுபாநி புஷ்ணாதி ந ஜாது ஹீயதே ||*

என்பதாக **ஸ்தோத்ர ரத்னத்தில்** கூறியபடி அஞ்சலி செய்த க்ஷணத்திலேயே இருவிதமான தீவினைகளையும் துளியும் மிச்சம் இல்லாமல் எம்பெருமான் போக்குகின்றான். இப்படி இந்த அஞ்சலியை அவன் யாசிப்பதற்கு முன்பே ஸ்வாமி தேசிகன் **வந்தே** என்று வணங்குகின்றார். அவன் கேட்கும் முன்பே கொடுத்து விட வேண்டும் என்பது ஸ்வாமி தேசிகன் திருவுள்ளம் போலும் என்று பெரியோர்கள் அனுபவிக்கின்றனர். இதனால் ஸ்வாமிக்கு கண்ணனிடம் உள்ள பக்தியும் ப்ரீதியும் நன்கு விளங்கும்

**ப்ருந்தாவன சரம்:** நித்ய விபூதி லீலா விபூதி என இரண்டுக்கும் தனி நாயகனாக நித்யஸூரிகளுடன் பரமபதத்தில் வீற்றிருந்து ஏழுலகங்களையும் ஆட்சி புரியும் ஒப்பற்ற செங்கோலை உடையவன் எம்பெருமான். அதனால் த்ருப்தி அடையாதவனாய் ஸம்ஸாரிகள் பக்கல் உள்ள பரிவினால் அவர்கள் இருக்கும் இடமான பூலோகத்திற்கு வந்து காடும் மேடும் முள்ளும் நிரம்பிய ப்ருந்தாவனத்தில் கூட்டம் கூட்டமான பசு மாடுகளை தன் கரிய திருமேனி வாட ரக்ஷித்துக் கொண்டு ஆனந்தமாக ப்ருந்தாவனத்தில் ஸஞ்சாரம் செய்தவன். **இட்டமான பசுக்களை இனிது மறித்து நீரூட்டி** என்று ஆண்டாள் அநுபவிக்கின்றாள். எம்பெருமானின் மங்கள ரேகைகளுடன் கூடிய திருவடி பட்டதால் ப்ருந்தாவனம் பவித்ரமானது என்பர். இவன் மாடு மேய்த்து விட்டு வரும் அழகை காண ஆசையுடன் கோபிமார்கள் காத்திருப்பார்கள்.

*திவ்யே பதே ஜலநிதௌ நிகமோத்தமாங்கே*
*ஸ்வாந்தே ஸதாம், ஸவித்ரு-மண்டல-மத்யபாகே |*
*ப்ரஹ்மாசலே ச பஹுமாநபதே முநீநாம்*
*வ்யக்திம் தவ த்ரிதசநாத வதந்தி நித்யாம் ||*
(தேவநாயக பஞ்சாசத் – 10)

''பரமபதத்தில் பாற்கடலில் வேதாந்தங்களில் மற்றும் ஸாதுக்களின் ஹ்ருதயத்திலும் ஸூர்யமண்டலத்தின் மத்யத்திலும் ப்ரஹ்மாசல க்ஷேத்ரத்திலும் வஸிப்பவன். இப்படிப்பட்டவன் ப்ருந்தாவனத்தில் ஸஞ்சரித்தான். இதனால் கண்ணனுடைய ஆநந்த கல்யாண குணங்களுக்குள்ளே வாத்ஸல்யம் என்னும் குணம் காட்டப்படுகிறது. வாத்ஸல்யம் என்பது பசுவுக்கு அன்று ஈன்ற கன்றின் மீது உள்ள அன்பு. பசுவிற்கு கன்றின் மேல் உள்ள அன்பைப் போல அடியார்களின் தோஷங்களை கணிசியாமல் அவர்களை ஏற்றுக் கொள்கிறான்''.

**வல்லவீஜந வல்லபம்:** ஆயர் குலப் பெண்களுக்கு ப்ரியமான நாதனாய் இருப்பவன். அறிவொன்றும்

இல்லாத ஆயர் குலப் பெண்களோடு வித்யாஸம் இல்லாமல் பழகியவன். தண்டகாரண்ய மஹர்ஷிகளே கோபிகைகளாக அவதரித்தவர் என்பர். கண்ணனின் யௌவநச் சிறப்பில் ரிஷிகளுக்கு கூட பெண்மை நிலை வந்து விட்டது என்கிறார் ஸ்வாமி தேசிகன். த்ருடிர் யுகாயதே த்வாம் அபச்யதாம் என்று கண்ணன் நினைவாகவே இருந்தவர்கள் கோபிகைகள். அவன் குழலெடுத்த ஊதின போது அவனுடைய வேணு கானத்தில் மயங்கி அனைத்தையும் மறந்தார்கள் கோபிகைகள். **ஊதும் அத்தீங் குழற்கே உய்யேன் நான் அது மொழிந்திட இடைத்தன் செய்கோலத் தூது செய் கண்கள் கொண்டொன்று பேசித் தூமொழி இசைகள் கொண்டு ஒன்று நோக்கி** என்று நம்மாழ்வார் அநுபவிக்கின்றார். கண்ணன் வேணு கானம் ராஸக்ரீடை என பலவித அநுபவங்களை இடக்கை வலக்கை அறியாத ஆய்ச்சியர்களுக்கு அளித்தவன். கோபிகைகளுக்கு விசேஷமாய் அநுக்ரஹம் செய்வதற்கு பரமஸுலபனாய் நின்றவன். ஸ்ரீவல்லபனாக இருப்பவன் அந்த கோபிகைகளுக்கு வல்லபனானான். இதனால் ஸௌசீல்யம் என்ற குணம் சொல்லப்பட்டது ஆகிறது.

**ஜயந்தீ ஸம்பவம் தாம:** ஆவணி மாதத்து கிருஷ்ணபக்ஷ அஷ்டமியோடு சேர்ந்த ரோகிணி நக்ஷத்ரத்தில் நள்ளிரவில் உலகுய்யத் தோன்றிய சோதி வடிவானவன். **அத்தத்தின் பத்தாம் நாள் தோன்றிய அச்சுதன்** என்று பெரியாழ்வார் கண்ணனின் அவதாரத்தை மறைத்துச் சொன்னது போல் ஸ்வாமி தேசிகனும் இங்கு பெயரைக் குறிப்பிடாமல் அவதாரத்தை மறைத்துப் பேசுகிறார். கம்ஸனால் கண்ணனுக்குக் கேடு வந்துவிடுமோ என்கிற பயம் ஸ்வாமி தேசிகனுக்கும் கூட இருந்தது போலும் என்கின்றார்கள் ஆன்றோர்கள். **ஆணொப்பார் இவன் நேர் இல்லை காண்** என்று பெரியாழ்வார் கிருஷ்ணாவதாரத்தைக் கொண்டாடுகிறார். பரமபத நாதனும் கண்ணனுக்கு ஒப்பாக மாட்டான் ஏனென்றால் அங்கே பரமபதத்தில் பகலில் இட்ட விளக்காக அல்லவோ இருக்கின்றான் பரமபத நாதன்!

ஆனால் கண்ணனோ தன்னைத் தாழவிட்டுக்கொண்டு ஆயர்குலத்துக்கோர் அணிவிளக்காய், மணிவிளக்காய் யாதவகுலத்தில் வந்து தோன்றினான். இந்த அவதாரம் ஓர் அத்புதம் தானே! **தமத்புதம் பாலகம் அம்புஜேக்ஷணம் சதுர்புஜம் சங்ககதாத்யுதாயுதம்** என்று ஆச்சர்யமாக அவதரித்தவன். இதனால் எம்பெருமானின் ஸௌலப்ய பராகாஷ்டையைக் காட்டுகின்றார் ஸ்வாமி தேசிகன்.

**வைஜயந்தீ விபூஷணம்:** பஞ்சபூதங்களுக்கு பிரதிநிதியான வைஜயந்தீ என்னும் வனமாலையை



ஆபரணமாக அணிந்தவன், பரம்பொருள் என்பதற்கான அடையாளமாக. இது பரமபதத்தில் அவனுடைய இருப்பை ஸூசிப்பிக்கின்றது. **நாதாயைவ நம: பதம்** என்பதாக கண்ணனை குறிப்பிடும்போது நாதன் என்கிறார் தசாவதார ஸ்தோத்திரத்தில் ஸ்வாமி தேசிகன். அவன் ஸர்வஜகத்துக்கும் உபயவிபூதிக்கும் நாதனாகத் திகழ்பவன். இதனால் பகவானுடைய ஸ்வாமித்வம் என்கிற குணம் சொல்லப்பட்டதாகிறது.

இவ்விதம் எம்பெருமான் **ஸுகஸேவ்யன்** என்று இந்த நான்கு குணங்களைக் கொண்டு இந்த ச்லோகத்தின் மூலம் ஸ்வாமி தேசிகன் அருளிச்செய்துள்ளார். ஆஸ்திகர்களுக்கு உள்ள பலவிதமான பயம் நீங்குவதற்காக பற்ற வேண்டிய நான்கு குணங்களாக இவை கொள்ளப்படுகின்றன. அபராதங்கள் செய்ததால் அவனை அணுகுவதற்கு உள்ள பயம் நீங்க **வாத்ஸல்யம்,** அவன் யார் நாம் யார் நீசனே நிறை ஒன்றும் இல்லை என்கிற பயம் போக **ஸௌசீல்யம்,** கலந்து பழகினாலும் அவன் இருக்கும் இடம் எங்கேயோ நாம் எவ்வாறு அவனை அணுக முடியும் என்கிற பயம் **ஸௌலப்யத்தால்** போகும். அவனுடன் நமக்கு ஸம்பந்தம் எவ்விதம் கிடைக்கும் என்கிற பயம் **ஸ்வாமித்வம்** அதாவது அவன் ஸ்வாமி நாம் தாஸர்கள் என்கிறதால் போகும் என்று இந்த ச்லோகத்தின் மூலம் அற்புதமாக அருளிச்செய்துள்ளார் ஸ்வாமி தேசிகன்.

ஸ்ரீ:

# Important Tenets Of Our Sampradaya 41

## Varadacharya's Glowing Obeisance To His Father-Acharya

Sri U. Ve. Natteri P. Srihari (a) Lakshmi Nrusimhacharyar Swami, Mylapore

Another Swami Desika's Vaarshika Uthsavam (Annual Festival) is around the corner. This year's Thirunakshathram of the great Acharya, the completion of 758 years, falls on September 22 and the celebration will commence nine days ahead, that is on the 13th. The Avathara Day will as usual feature a grand Mangalaasaasanam, Procession, and Saatrumurai.

For all of us, general devotees, Swami Desika is an Acharya; and some among us may even hold him as god. But Varadacharya or Nayinaaraacharya has the unique distinction of having two additional relationships — the Master is his father as well as the Brahmopadesa Acharya. How fittingly has he repaid Swami Desika for the special privilege?

Kumara Varadacharya, along with Brahma-thanthra Swathanthra Jeeyar, was the principal disciple of Swami Desika. He composed the hymn 'Sri Desika Mangalam' in Sanskrit and the Prabandham 'Pillai Anthaadhi' in Tamil on his illustrious father. These are the most widely-known and most frequently-recited works on Swami Desika.

In this Note, we shall take a look at the essence of the first 10 Paasurams of 'Pillai Anthaadhi'. This Prabandham has been modeled on 'Ramanusa Nootranthaadhi' of Thiruvarangath-Amudhanar. Exemplary devotion is the hallmark of this exquisite Prabandham, as can be seen from the summary of each Pasuram.

Just for the record, 19 of the 20 Paasurams contain the word 'Thooppul', the exception being the fifth (அன்று இவ்வுலகினை ஆக்கி...)



1. மாமலர் மன்னிய மங்கை...

The feet of Thooppul Pillai — who sings the praise of Sri Ramanuja who sought the feet of Nammazhwar who had adorned the feet of the Lord Sriman Narayana and Goddess Mahalakshmi — is atop my head.

2. சென்னி வணங்க...

O, people! Will we all have the great fortune of having the feet of the famed Swami Desika setting on our head forever? If that happens, the world of Naraka will get destroyed and we will ever enjoy the bliss of Moksha.

3. மாநிலத்தோதிய...

There is no refuge other than the singing the glory of the blemishless Lord of Thooppul who, provided us the essence of all the Sasthras and Vedas as also the path of Saranaagathi, and forever, sang the praise of Sri Ramanuja.

4. உய்யும் வகையில்லை...

There is no refuge for us other than the philosophy professed by Thooppul Pillai who had the great grace of Sri Ramanuja, who permanently had Lord Varadaraja, who emerged from the altar of sacrifice performed by Brahma, and Perundevi in his hearts.

5. அன்று இவ்வுலகினை ஆக்கி...

It was the Lord who created the universe in days of yore, gave out the great Saasthras for us and assumed the Venkata hills as His abode. It was also the same Lord who was later born as Guru Venkatanatha and averted the worldly diseases, that is the distresses of Samsara.

6. வித்தகன் வேதியன்...

The moment I chanted the sacred names of Vedantha Desika, who, by his sheer all-round mastery, conquered all logicians, all my grave sins got vanished!

7. வினைகாள் உமக்கு...

O, sins! You ought to look for some other place, for, your tendency to distress me is no longer sustainable. The reason is the noble Lord of Thooppul, whose mind is full of the great works of Sri Ramanuja, has entered my mind and has come to stay there.

8. பொருந்திப் புவிதனில்...

O, foolish people! You don't seem to know how to avoid the trap of Naraka. Listen! Worship the feet of the great Lord of Thooppul and you will get rid of all your distresses.

9. வணக்கம் ஒடுக்கம்...

Those who attain Thooppul Pillai, who always spoke about the greatness of Sri Ramanuja, as the refuge, will be bestowed with commendable attributes like obedience, humility, good habits and conduct and compassion; the undesirable ones like bad company, ignorance, sins and mental filth will keep away.

10. அடைபவர் தீவினை மாற்றி...

O, the Lord of Thooppul who uproots the sins of those who attain you! You are the Kalpa tree for those who realise your greatness. Kindly bless me with the fortune of attaining your feet by completely uprooting the miseries of Samsara.

11. கற்பகமே என்று...

O, the master of many an art form! Proficient poet! Wondrous one of Thooppul hailed by devotees! I will not call men of this world as the Kalpa tree nor will I get myself distressed by going through the rigours of penance standing on a mountain. (Hence) Bless me with Moksha, the ultimate thing!

12. பொருளானது ஒன்றும்...

O, Vedantha Desika of profound knowledge! Our Lord of Thooppul! There is no means (of salvation) that I possess. And also, owing to ignorance, I practise exactly the opposite of the noble ways of Vedic seers. Alas! I do not have any means except your grace henceforth. So, bless me!

13. ஆறாக எண்ணும்...

O, Lord of Thooppul forever having red, golden form! I do not have the ability to exclusively observe the tough Karma Yoga, Jnaana Yoga or Bhakthi yoga, considered as the means (to Moksha); nor do I possess the requisite austerity. Have not obtained the unwavering faith in the distinguished means (Prapaththi). (This being the case) I shall not, henceforth, forget your feet.

14. நின்பதம் தன்னிலும்...

The unblemished Lord of Thooppul! I have no direct devotion to your feet; nor do I have affinity towards those devotees who have attained your feet. Alas! What's the use of realising this now? Bless me in your own way. Please help me with your grace!

15. உன்னருள் அன்றி...

O, the light of the famous Thooppul clan! I have no good means other than your grace. Therefore, considering my wellbeing, you get rid of my two strong Karmas — good and bad. Extend your great grace by blessing me with the means (Prapaththi) prescribed by the pristine Ashtakshara!

16. விளக்காகி வேங்கட வெற்பினில்...

O, saviour from Thooppul! Bless me with pure devotion to the Lord who dwells in Thiruvenkatam like a lamp in whose chest His loving Consort lotus dame lives forever and your unflinching devotees! Also remove the state of sham devotion (from me).

17. காவலர் எங்கள்...

O, saviour of all and the king of the Thooppul clan! You attained proficiency in both Divya Prabandham and the Vedas with the grace of and by worshipping the honey-oozing feet of Appullaar, the chief of the Kidambi clan who is saviour to us all. Pray, protect us!

18. அருள் தரும் ஆரண தேசிகனே!...

O, Vedantha Desika who blesses (those who attain him)! Our Lord of Thooppul! One who emerged as the lion among poets and logicians! You snuffed the life out of debaters of other faiths. Please listen to this submission I make with (two) folded hands! O, handsome! Bless me so that my heart (always) thinks about your devotees!

19. தொண்டர் உகக்கும் துணையடி...

O, gem of the Thooppul clan! Hail to the pair of feet coveted by your devotees! Hail to your pure, smiling face! Hail to the hand with the 'Vyaakhya' Mudhra! Hail to the stunning Thiruman Kaappu! Hail to your form (Thirumeni) adorned with Thulasi chain, lotus chain and Yajnopaveetham!

20. வடிவழகார்ந்த வண் தூப்புல் வள்ளல்...

I have meticulously composed this Anthaadhi of twenty Paasurams on the soft (lotus) feet of the handsome benefactor of Thooppul for devotees to recite. Those who patronise this by reciting daily with resolve will have their head decorated with the soft feet of the Lord of Thooppul.

So, as prescribed in the final verse, let us daily recite this glowing salutation to Swami Desika and be the recipients of his unbridled grace!

***(to be continued…)***

ஸ்ரீ:

# Swami Desika – Master of Analogy (5)

## 100 Gems from Srimath Rahasya-thraya Saaram

Smt. Padmalatha Sridharan, Chennai

**Analogical Gems 21 to 25**

21. How even an inept person finds a treasure effortlessly (Kruthakruthya Adhikaaram):

"அகிஞ்சநன் அயத்நமாக மஹாநிதியைப் பெறுமாப் போலே"

Once a person has performed Prapathi, he has fulfilled all his obligations and hence there is nothing left for him to do in the sphere of attainment of Moksha. He is called "Kruthakruthyan"- (meaning "one who has done what he had to do"). He can spend the remaining years on earth without any fear or fervour, reposing his faith in Lord Krishna's words in the Charama Sloka – "Maa Sucha:" (do not worry). Sriman Narayana is the Ultimate Constant and Omnipotent and once He has taken a Prapanna into His fold, (which he does during Prapathi itself) the Prapanna can rest assured of his incredible fortune for the simple act of his done once.

It so happens that sometimes an inept person, without any effort, finds a treasure which is unattainable to others. Similarly, a Prapanna, who has renounced other fruits except Moksha and discarded other means of attaining God, like Bhakti Yoga and reposed his faith in the Lord through Prapathi, gains the supreme fortune of reaching Sri Vaikuntam once he leaves the earth.

22. How when the king's servants anoint garlands and jewels over his shirt, they know it is for the king's pleasure and has nothing to do with the shirt (Kruthakruthya Adhikaaram):

"ராஜஸேவகர் ராஜாவுக்குச் சட்டைமேலே மாலையையும் ஆபரணத்தையும் இட்டாலும், சட்டையில் துவக்கற்று ராஜாவின் ப்ரீதியே ப்ரயோஜநமாகத் தெளிந்திருக்குமாப் போலே"

This is a wonderful analogy used in a lighter vein by Swami Desika, which answers a pertinent question that could arise in the minds of all Prapannas.

There is an oft-repeated query in the question-answer section of religious journals in our Sampradaya – "I have performed Prapathi as I have realised that Sriman Narayana is the Supreme Reality. So, is it correct that I pray to other Gods during my daily and routine ablutions, like Sandhyavandhanam and Amavasya Tharpanam, etc., as the Manthras seem to be in praise of other Gods?"

Swami Desika explains thus: When a servant adorns his master with garlands and jewels he has to necessarily anoint them over his shirt but he knows fully well that the adornment is not for the shirt but for the pleasure of the king! The lesser Gods or pretenders to Godliness are but bodies to Sriman Narayana.

Lord Krishna Himself declared thus in the Bhagavath Gita – "அஹம் ஹி ஸர்வ யஜ்நாநாம் போக்த ச ப்ரபு: ஏவ ச!"

(I am the one who is worshipped in all Yajnaas"). So, all rituals are routed ultimately to Sriman Narayana only.

23. How the Lord's dictum is understood by the Mukthas (Kruthakruthya Adhikaaram):

"ப்ரத்யக்ஷவிதிதபரமபுருஷ அபிப்ராயரான முக்தரைப் போலே"

This is in continuation of the previous analogy. The whole edifice of our Sampradaya is built upon Sarira-Sariri bhava (i.e. our souls are bodies to Sriman Narayana's Soul). So, any paeans to other Gods would ultimately end up with Sriman Narayana since they are also Jivas (sentients) just like us.

Sage Jaimini is of the view that all words if split up phonetically and studied, would be found to be referring to Sriman Narayana only. So, a person has to perform all the rituals and actions as laid down in the Saasthras with the prescribed Manthras. He need not concern himself with the presumed import as it is Sriman Narayana who is ultimately denoted by all the Manthras.

But a word of caution here: This principle holds good only for those rituals and actions as laid down in the Saasthras, since only they enlighten us about the Lord's dictum. We cannot extend it so as to apply to all our other actions or those which are outside the scope of the Saasthras. We who live on the earth have to follow the Holy Scriptures which represent the Lord's dictum as we cannot receive it directly like the Mukthas (those who reside in Sri Vaikuntam). But we are no less fortunate in that we have received it through the Saasthras as He Himself



has stated "ச்ருதி ஸ்ம்ருதிர் மம ஏவ ஆஜ்ஞா" (the Vedas and Smruthis are only My orders).

24. How a person who has sold a major part of his native land and retained a small portion for sentimental reasons, feels towards his property (Utharakruthya Adhikaaram):

"பழந்திருவிளையாட்டத்திலே சிறிதிடத்தை அடைத்துக் கொண்டிருப்பாரைப் போலே"

Here Swami Desika delineates how a Prapanna should view his stay on this earth – Once a person has realised his true nature and performed Prapatti, his remaining sojourn on the Earth is as per the wish of the Lord and he has to be detached from all the happenings.

A person may have sold off a major portion of his inherited land but might have retained/rented out a small portion for himself for sustenance. He would display a sort of detached attachment towards his property – it serves him currently as a means of livelihood but he is no longer the owner of it all. Similarly, a Prapanna cannot renounce everything and live like an ascetic as he has to make his livelihood till his end, and has to worship the Lord everyday with some offerings.

However, he should have no material desires and so shouldn't consider anything as entirely his. He should spend his time in the study of scriptures, contemplation of the Lord's nature, form, qualities, etc. and submit all his actions (karmas) for the pleasure of the Lord.

25. How a dam should be built in time to control sudden floods (Utharakruthya Adhikaaram):

"வருகிற நீருக்கு அணை கோலும் கணக்கிலே"

This analogy and the next one are in answer to the question of how a Prapanna should spend the rest of his life and what his thoughts should be. In effect, it is an instruction on the "Art of Living".

We see that some people, who have performed Prapathi at an advanced age, lament that they wasted so many years of their life and they have little time left to experience the Lord's mercy. Be that as it may, they should spend their life meditating upon the Lord's mercy in gratitude of His acceptance now, and in anticipation of the wonderful fortune awaiting them. They should not lose sight of their obligations arising as per their Varna and Asrama and should strive to fulfil them.

A dam should be built before the floods arrive and there is no point in building it once the floods have subsided after causing havoc. Similarly, a Prapanna should not consider himself ineligible to approach the Lord in view of his past deeds, distance himself and drift away. He should not lose his perspective and has to perform his duties (kainkaryams) as per the Lord's dictum explicitly laid down in the Saasthras.

***(to be continued…)***

ஶ்ரீ:



**With Pranams:**

**N. Seshadri & Family,**
Flat No. 11, Lakshmi,
8/16, Justice Sundaram Road,
Myapore, Chennai 600 004.
&
**Kimsuka Narasimhan,**
**S. Narasimhan & Pushpa Narasimhan**

**SVDD thanks Sri N. Seshadri & Family, Kimsuka Narasimhan,**
**S. Narasimhan & Pushpa Narasimhan** for sponsoring this month's issue of Desika Sandesam





ஆடி வெள்ளிக்கிழமை தாயார் உத்ஸவம்









ஆண்டாள் உத்ஸவம்




